வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com   மலர் : 05   16.03.2024 சனிக்கிழமை   இதழ் : 76   பக்கங்கள் : 12





# வெடுக்குநாறி அநீதிக்கு எதிராக ஆவேசமாக திரண்டனர் மக்கள்!

## பொலிஸாரின் தடையை மீறி பேரணியில் பெரும் எண்ணிக்கையானோர் பங்கேற்பு

வவுனியா, மார்ச் 16

**பொலிஸாரின் அராஜகத்துக்கு எதிராகவும் தமிழருக்கான நீதி கோரியும் போராட்டம் ஒன்று வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய நிர்வாகத்தினரின் ஏற்பாட்டில் நேற்று வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டது.**

**பொலிஸாரின் தடையையும் மீறி இந்த ஆர்ப்பாட்டத்தில் பெரும் எண்ணிக்கையானோர் பங்கேற்றனர்.**

நெடுங்கேணி நகர சந்தியில் ஆரம்பித்த கண்டன ஆர்ப்பாட்ட பேரணி, நெடுங்கேணி - புளியங்குளம் வீதி ஊடாக சென்று வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் வாயிலில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றதுடன், உதவிப் பிரதேச செயலாளரிடம் கண்டன மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அங்கிருந்து பேரணியாக சென்ற ஆர்ப்பாட்டக்காரார்கள் வனவளத் திணைக்கள அலுவலக வாயிலில் நின்று வனவளத் திணைக்களத்திற்கு எதிராக கோசங்களை எழுப்பியதுடன், பின்னர் அங்கிருந்து சென்று

11

இந்திய மீனவர் அத்துமீறல்:

## கண்டித்து செவ்வாயன்று உண்ணாவிரத போராட்டம்

- சி.சிலக்சன் -

யாழ்ப்பாணம், மார்ச் 16

இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியை தடுக்கக் கோரி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை உண்ணாவிரதப் போராட்டத்தில் கடற்றொழிலாளர்கள் ஈடுபடவுள்ளனர் என்றும் யாழ். இந்தியத் துணைத் தூதரகம் முன்பாக இந்தப் போராட்டம் நடைபெறும் எனவும் யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனம் அறிவித்துள்ளது.

11

## மனித உரிமை பணிமனையை முற்றுகையிட்டுப் போராட்டம்!



வவுனியா, மார்ச் 16

வெடுக்குநாறிமலையில் கைது செய்யப்பட்ட 8 பேரின் உறவினர்கள் வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பணிமனையை முற்றுகையிட்டு நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா சிறையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தமது உறவுகளின்

11



இந்துக்களின் போர்:

## யாழ். இந்துக் கல்லூரி! வலுவான நிலையில்

யாழ்ப்பாணம், மார்ச் 16


சுபர்ணன், ஹரிகரன் ஆகியோரின் அபார பந்துவீச்சு மூலம் கொழும்பு இந்துக் கல்லூரியை 80 ஓட்டங்களுக்கு சுருட்டியது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

இதேநேரம், பதிலுக்கு தனது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 70 ஓட்டங்கள் முன்னிலை பெற்று வலுவான நிலையில் உள்ளது.

11

## வடக்கு-கிழக்கில் உள்ளூர் உற்பத்திகளுக்கு ஏற்றுமதி வாய்ப்புக்கள் அதிகரிக்கப்படும்!

### யாழ்ப்பாணத்தில் கூறினார் அமெ. பிரதி தூதுவர்



யாழ்ப்பாணம்,மார்ச் 16

வடக்கு-கிழக்கில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை ஊக்கப்படுத்துவதோடு, உள்ளூர் உற்பத்திகளுக்கான ஏற்றுமதி வாய்ப்புக்களை அதிகரிக்க அமெரிக்கா நடவடிக்கைகளை எடுத்து வருவதாக இலங்கைக்கான அமெரிக்க பிரதித் தூதுவர் டக்ளஸ் இ. சொனெக் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட அவர் , அமெரிக்கன் கோர்னரில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே இதனை

11

## நல்லூரில் இருந்து வவுனியாவுக்கு இன்று வாகன பேரணி

### த.தே.ம. முன்னணி அழைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 16

அனைவருக்காகவும் இன்று எட்டு அப்பாவி உறவுகள் வவுனியா சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு ஆதரவு வழங்கும் முகமாக இன்று சனிக்கிழமை பேரணியொன்று முன்னெடுக்கப்பட வுள்ளாதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக பேச்சாளரும் சட்டத்தரணியுமான சுகாஸ் தெரிவித்தார்.

இதனடிப்படையில், கைது செய்யப்பட்டவர்களின் உறவுகள், கைதுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும்

11

## வட்டு. இளைஞர் கடத்திக் கொலை; 5 சந்தேக நபர்கள் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், மார்ச் 16

பொன்னாலையில் கடத்தி ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 5 சந்தேக நபர்களும் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வட்டுக்கோட்டை மாவடிப் பகுதியை சேர்ந்த 23 வயதான ஒருவர் கடந்த 11 ஆம் திகதி கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தார்.

11

## வாள்வெட்டுக் குழுவினர் யாழ். நகரம் அருகே கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 16

வாள்வெட்டுக் குழுவை சேர்ந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படும் ஐந்து இளைஞர்கள் நேற்று அதிகாலை யாழ்ப்பாணம் நகருக்கு அண்மையாகக் கைது செய்யப்பட்டனர்.

ஓட்டோவில் பயணித்த அவர்களிடம் இருந்து வாள்கள், இரும்புக் கம்பி என்பவை

11

## பொருளாதாரத்தை தின்னும் பெருச்சாளி நிதி அமைச்சில்!

### டலஸ் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 16

நிதி அமைச்சில் பொருளாதாரத்தை தின்னும் பெருச்சாளி ஒன்று உள்ளது. இந்த எலி சிறிலங்கன் எயார் லைன்ஸிற்குள் இருந்தது என சுதந்திர மக்கள் சபையின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர்

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ தொலைக் காட்சி ஒன்றுக்கு நீண்ட பேட்டி ஒன்றை அண்மையில் வழங்கியிருக்கிறார். நாட்டில் இன்றைய கட்சிகள் பற்றியும் - அரசியல் நிலைமை பற்றியும் அவர் நீண்டநேரம் அந்தப் பேட்டியில் கலந்துரையாடியதுடன், பல விடயங்களை யதார்த்தமாகப் பேசியிருக்கிறார்.

நாட்டிலுள்ள கட்சிகள் பற்றி விபரித்த அவர், ஜே. வி. பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி இன்றுள்ள அரசியல் கட்சிகளில் நாடளாவிய ரீதியில் மிகவும் பலமான கட்டமைப்பைக் கொண்டிருக்கின்றது என்பதை ஏற்றுக் கொண்ட அவர், அவர்கள் ஆயுத இயக்கமாக இருந்த காலத்திலிருந்தே தமது இயக்கத்தின் கட்டமைப்புகளை சிறப்பாக செய்து வருகின்றனர் என்றும் ஆனால், அவர்களுக்கு மக்கள் மத்தியில் ஆதரவு இல்லை எனவும் கூறியிருக்கிறார்.

அதற்கு அடுத்ததாக தமது பொதுஜன பெரமுன கட்சியே நாடு முழுவதும் சிறப்பான கட்டமைப்பைக் கொண்டிருக்கின்றது என்றும் அதேவேளை சுமார் இருபது முதல் முப்பது இலட்சம் வரையான மக்கள் செல்வாக்கை அடித்தளமாகக் கொண்டிருக்கின்றது எனவும் தெரிவித்தார்.

அதற்கு அடுத்ததாக ஐக்கிய மக்கள் சக்தி தனக்கான கட்டமைப்பையும் மக்கள் செல்வாக்கையும் கொண்டிருப்பதாகக் கூறிய அவர் ஆனால், அங்கு மக்கள் நம்பிக்கை கொள்ளக்கூடிய தலைமை இல்லை என்றும் இன்று நாடு எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்து நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்லக்கூடிய தலைமை அங்கு இல்லை என்றே மக்கள் கருதுகின்றனர் எனவும் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரை இன்று கட்சிக்கான கட்டமைப்புகளையோ அல்லது மக்கள் செல்வாக்கையோ கொண்டிருக்கவில்லை என்று கூறிய அவர், ஆனால் இன்று நாடு எதிர்கொண்டுவரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்லக்கூடிய தலைவராக ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே நாட்டில் காணப்படுகிறார் என்றும் அதனால், ஐக்கிய தேசியக் கட்சியே இன்று நாட்டுக்குத் தேவையான தலைமையைக் கொடுக்கக்கூடிய திறனைக் கொண்டிருக்கின்றது எனவும் தெரிவித்திருக்கிறார்.

தமது கட்சிக்குள்ளும் தலைமைத்துவ பிரச்னை இருந்ததாகவும் அதனால்தான் கோட்டாபயவை கொண்டுவரவேண்டிவந்தது என்றும் கூறிய பஸில் ராஜபக்ஷ அதன் பயனையே- அதாவது ஆளுமையுள்ள தலைவர் ஒருவர் இல்லாத குறையையே கட்சி எதிர்கொண்டதாகவும் நிலைமையை ஒப்புக்கொண்டிருக்கிறார்.

இதுகாலவரை ஒரு சர்ச்சைக்குரிய அரசியல்வாதியாக பார்க்கப்பட்ட பஸில் ராஜபக்ஷ, அந்தத் தொலைக்காட்சிப் பேட்டியில் நாட்டின் இன்றைய அரசியல் நிலைமைகளை சரியாகப் புரிந்து கொண்டு யதார்த்தமாகப் பேசினாரென்று தெற்கு ஊடக நண்பர் ஒருவர் விபரித்தார்.

நாடு இன்று எதிர்கொள்ளும் நெருக்கடிகளைக் கருத்தில் கொண்டு, பொதுஜன பெரமுன - ஐக்கிய மக்கள் சக்தி - ஐக்கிய தேசியக் கட்சி என்பன ஓரணியில் இணைந்து நாட்டை முன்னோக்கி கொண்டுசெல்லவேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

இன்று அரசியல் கட்சி ஒன்றின் தலைவர், தமது கட்சியிலும் பொருத்தமான தலைவர் இல்லை என்பதை ஏற்றுக்கொண்டிருப்பது ஆச்சரியத்துடன் பார்க்கப்படுகின்றது.

அண்மைக்காலமாக, ஜனாதிபதி தேர்தலையும் பாராளுமன்றத் தேர்தலையும் ஒத்திவைக்க ஜனாதிபதி திட்டமிட்டு வருகிறார் என்று பல்வேறு தரப்பினரும் குற்றம் சுமத்திவரும் நிலையில் அப்படியொரு முயற்சி நடைபெற்றால் அதற்கு தமது கட்சி ஆதரவு வழங்கப்போவதில்லை என்றும் பஸில் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார். இன்று பாராளுமன்றத்தில் அவரின் கட்சியே உத்தியோகபூர்வமாக பெரும்பான்மையைக் கொண்டிருந்தாலும் அந்தக் கட்சியின் பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்கள் அவர்களோடு இல்லை என்பதை பஸில் உணர்ந்திருக்காமல் இருக்கமுடியாது. அவர் அண்மையில் அமெரிக்காவிலிருந்து தாயகம் திரும்பியிருந்தபோது விமான நிலையம் வரை சென்று அவரை வரவேற்றனர். கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நாமல் ராஜபக்ஷ தலைமையில் விமான நிலையத்தில் திரண்டிருந்தவர்களில் இருபத்தியெட்டு எம்.பிக்கள் மாத்திரமே இருந்தனர். அதைவிட முன்னாள் பிரதேச சபை தலைவர்கள் சிலர், மாகாண சபை உறுப்பினர்கள் சிலர் என்று நூறுக்கும் குறைவானவர்களே இருந்தனர்.

அவர் தாயகம் வரும்போது பெரும் வரவேற்பைக் கொடுக்கக் கட்சி விரும்பியபோதிலும் அங்கு திரண்டிருந்தவர்கள் சில பத்துப் பேர்களே. அங்கு பிரசன்னமாகியிருந்த அந்த இருபத்தியெட்டு எம்.பிக்கள் மாத்திரமே தற்போது பொதுஜன பெரமுனவில் இருக்கின்றனர் என்றே அப்போது ஊடகங்கள் விமர்சித்திருந்தன.

ஆக, தேர்தல்களை ஒத்திவைக்கும் முயற்சி அரச தரப்பிடம் இருக்கின்றதா என்பது தெரியவில்லை. ஆனாலும் அப்படியொரு முடிவை எடுத்தால் பாராளுமன்றத்தில் தனக்கு அதற்கான ஆதரவு கிடைக்கும் என்றால் மட்டுமே ரணில் அத்தகைய நகர்வுகளை செய்வார் என்பது புரிந்துகொள்ளக் கூடியதுதான்.!

**- ஊர்க்குருவி.**

# ‘இந்துக்களின் போர்’ போட்டியின் பதிவு


















இந்துக்களின் போர் என்று வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - கொழும்பு இந்துக் கல்லூரி அணிகளின் பெருந்துடுப்பாட்ட போட்டி நேற்று ஆரம்பமாகி நடைபெற்ற வேளை...!

(படங்கள் - யாழ். இந்துக் கல்லூரி புகைப்பட கழகம்)

Eelanadu
16.03.2024 சனிக்கிழமை
சோபகிருது வருடம், பங்குனி 03

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் பேசும் மக்களாக இணைதல்

ஜனாதிபதி தேர்தலில் ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பில் ‘மக்கள் மனு’ - சிவில் சமூகம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வு தமிழ் அரசியல் சூழலில் குறிப்பிடத்தக்களவு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. ஆனால், அவ்வாறானதொரு முயற்சி இலங்கையின் தமிழ் பேசும் மக்களாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்னும் அபிப்பிராயமும் முன்வைக்கப்படுகின்றது. ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் வழமைபோல் கையாளக்கூடாது - வெறும் நம்பிக்கைகளின் அடிப்படையில் தென்னிலங்கை வேட்பாளர் ஒருவரை ஆதரிப்பது புத்திசாதுரியமாக அமையாது என்னும் புரிதல், சிந்திக்கும் தரப்பினர் மத்தியில் ஏற்பட்டிருக்கின்றது. அந்த வகையில் “மக்கள் மனு“ சிவில் சமூகத்தால் பற்றவைக்கப்பட்ட சிறு நெருப்பு பெரும் காட்டுத் தீயாகவும் மாறலாம்.

இந்தப் பின்னணியில் தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் தமிழ் பேசும் மக்களாக இணைவது சாத்தியமானதா? அவ்வாறு இணைய முடியுமென்றால் அது ஒரு வரலாற்று நகர்வாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், எந்தக் கோரிக்கையின் அடிப்படையில் தமிழ் பேசும் மக்களாக இணைவது? ஈழத் தமிழ் மக்கள், மலையக மக்கள் மற்றும் முஸ்லிம் மக்களே தமிழ் பேசும் மக்கள் என்னும் வரையறைக்குள் அடங்குகின்றனர்.

முஸ்லிம் மக்களை தமிழ் பேசும் மக்கள் என்று தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் கூறிக்கொண்டாலும்கூட அவர்கள் தங்களை தமிழ் பேசும் மக்களாக அடையாளப்படுத்திக் கொள்ள விரும்புவதில்லை - மாறாக, அவர்கள் தங்களை முஸ்லிம் மக்களாகவே அடையாளப்படுத்திக் கொள்கின்றனர். இதன் மூலம்தான் தங்களின் அரசியல் நலன்களைப் பாதுகாக்க முடியுமென்று அவர்கள் எண்ணுகின்றனர்.

இன்றைய அரசியல் சூழலில், தமிழ் பேசும் மக்களாக இணைய வேண்டுமாயின், அரசமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துங்கள் என்னும் ஒரு கோரிக்கையின் கீழ்தான் அனைவரையும் ஒன்றிணைக்க முடியும். ஆனால், அவ்வாறானதொரு கோரிக்கையின் அடிப்படையில், ஈழத் தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ்த் தேசிய கட்சியினரோ உடன்படமாட்டார்கள். ஏனெனில், அவர்கள் தங்களின் இலக்காக சமஷ்டியை வலியுறுத்தி வருவதால் அவர்களால் 13ஆவது திருத்தச் சட்டத்தை ஓர் இறுதித் தீர்வாக ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்தியப் பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதும் விடயத்தில் மலையக மற்றும் முஸ்லிம் கட்சிகள் இறுதியில் பின்வாங்கியதை நாம் இந்த இடத்தில் நினைவில் கொள்ள வேண்டும். ஆரம்பத்தில் ஒன்றுபட்டு செயல்படுவதில் இணங்கியவர்கள் - பின்னர் ஈழத்து கட்சிகள் சமஷ்டியை வலியுறுத்தியதால் பின்வாங்கினர் - மேலும், வடக்கு - கிழக்கு இணைப்பு விடயத்தில் முஸ்லிம் கட்சிகள் இணங்காது. அவர்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளின்றி அவர்கள் வடக்கு - கிழக்கு இணைப்புக்கு உடன்படமாட்டார்கள்.

நிலைமை இவ்வாறிருக்கின்றபோது, ஒரு தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் அனைவரையும் எவ்வாறு ஒன்றிணைக்க முடியும். ஆனால், ஜனாதிபதி தேர்தலின் போது தென்னிலங்கை வேட்பாளர்களிடம் சில விடயங்களை வலியுறுத்துமாறு வடக்கு - கிழக்கை சேர்ந்த சிவில் சமூகக் குழுக்கள் ஒன்றிணைந்து மலையக மற்றும் முஸ்லிம் தலைவர்களிடம் கோரிக்கையொன்றை முன்வைக்கலாம். அதாவது, அரசமைப்பில் உள்ளவற்றை அமுல்படுத்தும் இணக்கப்பாட்டை பிரதான வேட்பாளர்கள் தங்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் உள்ளடக்குமாறு வலியுறுத்துமாறு கோரலாம். இன்று சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளை அனைவருமே ஏற்றுக்கொள்கின்றனர். நாடு பொருளாதார ரீதியில் முன்னேற வேண்டுமாயின் அவற்றைத் தவிர்க்க முடியாததென்று கூறப்படுகின்றது. அதனை சிங்கள மக்கள் எதிர்க்கவில்லை. இதேபோன்று, நாட்டை முன்னோக்கிக்கொண்டு செல்லவேண்டுமாயின், அரசமைப்பிலுள்ள விடயங்களை அமுல்படுத்த வேண்டும் - மாகாண சபைகள் சுயாதீனமாக இயங்க வேண்டும். இவற்றை தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைக்குமாறு கோர முடியும். தமிழ் பேசும் மக்கள் என்னும் அடிப்படையில் இவ்வாறான விடயங்களை வலியுறுத்துமாறு கேட்கலாம்.

தமிழ் பொது வேட்பாளர் விடயத்தை ஈழத் தமிழர்களாக மட்டுமே கையாள முடியும் ஏனெனில், சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வு கோரிக்கையை ஈழத் தமிழ் மக்கள் மட்டுமே கொண்டிருக்கின்றனர். அதற்கு மாறான நிலைப்பாடுடைய கட்சிகளையும் ஈழ மக்களில் ஒரு பகுதியினர் ஆதரிக்கின்றனர் - ஆனால், பெரும்பான்மையான ஈழத் தமிழ் மக்கள் சமஷ்டி கோரிக்கையை வலியுறுத்தும் தமிழ் கட்சிகளையே ஆதரித்து வருகின்றனர். இவ்வாறானதொரு நிலையில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதாயின், சமஷ்டி கோரிக்கையே அதற்கான எல்லைக்கோடாக இருக்க முடியும்.

*இலங்கையில் சீன இராணுவத்தளம்*

# அமெரிக்க புலனாய்வுப் பிரிவின் தகவலை நிராகரித்தது இலங்கை

*கொழும்பு, மார்ச் 16*

இலங்கையில் இராணுவத் தளங்களை உருவாக்குவதற்கு சீனா திட்டமிடுகின்றது என அமெரிக்காவின் புலனாய்வுப் பிரிவுகள் வெளியிட்டுள்ள தகவலை இலங்கை நிராகரித்துள்ளது.

இலங்கையின் எல்லைக்குள் தளங்களை அமைப்பது தொடர்பில் சீனா உட்பட எந்த நாட்டுடனும் பேச்சு இடம்பெறவில்லை என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.



அமெரிக்காவின் புலனாய்வு அமைப்புகளின் தகவல் தவறானது. இதனை நாங்கள் முற்றாக நிராகரிக்கின்றோம் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

இலங்கை தனது எல்லைக்குள் எந்த சூழ்நிலையிலும் எந்தநாடும் தளங்களை அமைப்பதற்கு அனுமதிக்காது எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை உட்பட பல நாடுகளில் இராணுவ கட்டமைப்புகளை ஏற்படுத்துவது குறித்து சீனா ஆராய்ந்து வருகின்றது என அமெரிக்க புலனாய்வுப் பிரிவினர் தமது சமீபத்தைய அறிக்கையில் தெரிவித்துள்ளதாக ஐ.ஏ.என்.எஸ் செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# காட்டுத் தீயால் இலங்கையில் 55 ஹெக்ரேயர் காடுகள் அழிவு

*கொழும்பு, மார்ச் 16*

கடந்த சில வாரங்களாக பதிவான காட்டுத் தீயினால் 55 ஹெக்ரேயர் காடுகள் அழிவடைந்துள்ளதாக வனவள பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இது சுற்றுச்சூழலுக்கு கடுமையான சேதமென வனவள பாதுகாப்பு திணைக்களம் கூறியுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் காட்டுத் தீயை தடுக்கும் வகையிலான விழிப்புணர்வு வாரத்தை எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

(அ)

# கோட்டாபய நியமித்த ஆணைக்குழு தொடர்பான விசாரணைகள் நிறைவு

*கொழும்பு, மார்ச் 16*

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்க்ஷவின் ஆட்சிக் காலத்தில் நியமிக்கப்பட்ட அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரணை நடத்திய ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் முடிவுகளை இரத்துச் செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை நிறைவடைந்துள்ளது.

இதேவேளை, இது தொடர்பான தனது தீர்ப்பை அறிவிப்பதை உயர் நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, முன்னாள் கடற்படைத் தளபதி ட்ரவிஸ் சின்னையா, முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி பத்மினி ரணவக்க மற்றும் பலர் இந்த மனுகளை தாக்கல் செய்திருந்தனர்.


(ஐ)





பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவின் முதலாம் நாள் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபர் பரமலிங்கம் சந்திரபாகு தலைமையில் ஆரம்பமானது. இதன்போது பருத்தித்துறை நகரத்தைச் சுற்றிய நடைபவனியும் இடம்பெற்றது. விருந்தினர்கள், பாடசாலை சமூகத்தினர் ஆகியோர் நடைபவனியில் ஈடுபட்டிருப்பதைப் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.தில்லைநாதன்)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்து வந்த மனகசப்புகள் நீங்கும். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். சக ஊழியர்களால் உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். விழிப்புடன் செயல்பட வேண்டும்.

**மிதுனம்**
விடாப்பிடியாக செய்ல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். சக ஊழியர்களிடம் விட்டுகொடுத்து போங்கள். கவனம் தேவை.

**கடகம்**
தன்னம்பிக்கையுடன் பொதுகாரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். மதிப்புக் கூடும் நாள்.

**சிம்மம்**
உங்கள் போக்கில் சிறிது மாற்றம் செய்வீர்கள். உறவினர்கள், வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். சக ஊழியர்கள் முன்னுரிமை தருவார்கள். நன்மை நடக்கும் நாள்.

**கன்னி**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த சோர்வு நீங்கி உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் தள்ளிப் போன விஷயங்கள் முடியும். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் வரும். மாற்றம் ஏற்படும் நாள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். உயரதிகாரிகள் உங்களை குறை கூறுவார்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்**
அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். சகோதரர்களின் அரவணைப்பு இருக்கும். சக ஊழியர்கள் உங்கள் வேலை களைப் பகிர்ந்துக் கொள்வார்கள். மகிழ்ச்சியான நாள்.

**தனுசு**
ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள்.பழைய சிக்கல்கள் தீரும். வியாபாரத்தில் ராஜதந்திரத்தால் லாபம் அதிகரிக்கும். அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள்.

**மகரம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் புது சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

**கும்பம்**
எதிர்பார்த்ததில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒருவேலை முடியும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். சக ஊழியர்கள் வேலைகளை விரைந்து முடிப்பார்கள். நன்மை கிட்டும்.

**மீனம்**
குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உங்கள் கை ஓங்கும். தைரியம் கூடும் நாள்.

# தமிழகத்தின் தமிழ் பண்பாட்டின் எதிரி தி. மு. க.!

## பிரதமர் மோடி சாடல்

கன்னியாகுமரி, மார்ச் 16

தி. மு. க. தமிழகத்தின், தமிழ் பண்பாட்டின் எதிரி. நமது கடந்த கால பெருமைகளையும் பாரம்பரியத்தையும் கண்மூடித் தனமாக எதிர்க்கின்ற எதிரி என கன்னியாகுமரி பொதுக் கூட்டத்தில் பேசிய பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரியில் நடைபெற்ற பா. ஜ. க பொதுக்கூட்டத்தில் பங்கேற்ற இந்தியப் பிரதமர் மோடி தமிழில் சகோதர, சகோதரிகளே எனக் கூறி பேசத்தொடங்கினார், "மக்களை கொள்ளையடிக்கவே எதிர்க்கட்சிகள் ஆட்சி அமைக்க நினைக்கிறார்கள். தி. மு. கவை வீழ்த்தி பா. ஜ. க ஆட்சியை அமைப்போம். காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை பா. ஜ. க அலை வீசுகிறது.

நாட்டை துண்டாட வேண்டும் என நினைத்தவர்களை காஷ்மீர் மக்கள் தூக்கி எறிந்து விட்டார்கள். தமிழகத்தில் இந்தியா கூட்டணி எடுபடாது. தி. மு. க. வை வீழ்த்தி பா. ஜ. க ஆட்சியை அமைப்போம். இந்தியா கூட்டணி 2ஜி உள்ளிட்ட ஊழல்கள் நிறைந்த கூட்டணி. இந்தியா கூட்டணி ஊழல் செய்வதற்கு தான் போராடுகிறது.



பா. ஜ. க. கன்னியாகுமரியை நேசிக்கிறது, ஆனால் தி. மு. க. - காங்கிரஸ் கூட்டணி கன்னியாகுமரி மக்களை வஞ்சிக்கிறது.

தி. மு. க. - காங்கிரஸின் இந்தியா கூட்டணியால் தமிழகத்தில் எந்தவிதமான வளர்ச்சித் திட்டங்களையும் முன்னெடுக்கவே முடியாது. அவர்களுடைய வரலாற்றை எடுத்துப் பார்த்தால் மோசடியும், ஊழலும்தான் முதன்மையாக இருக்கும். அவர்களுடைய கொள்கையே அரசியலில் கொள்ளை அடிக்க வேண்டும் என்ற ஒற்றை இலக்குதான்.

தி. மு. க. தமிழகத்தின், தமிழ் பண்பாட்டின் எதிரி. நமது கடந்த கால பெருமைகளையும் பாரம்பரியத்தையும் கண்மூடித்தனமாக எதிர்க்கின்ற எதிரி. உச்ச நீதிமன்றமே தமிழகத்தை கண்டிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது, நமது கலாசாரத்தின் மீதும், பண்பாட்டின் மீதும், பாரம்பரியத்தின் மீதும் எப்பொழுதும் தி. மு. க. வெறுப்பைக் கக்கிக் கொண்டிருக்கிறது. தமிழகத்தின் பெருமையை, அடையாளத்தை பாதுகாக்க பா. ஜ. க என்றும் முன்னணியில் இருக்கிறது. அவர்களின் தூற்றல்களையும். பேச்சுகளையும் நாங்கள் பொருட்படுத்துவதே கிடையாது.

(ஐ)

# சின்னம் வேண்டும் என்றால் சீமான் கூட்டணிக்கு வரலாம்!

## பாரதிய மக்கள் ஐக்கிய கட்சி

நாம் தமிழர் கட்சியின் கரும்பு விவசாயி சின்னத்தை பெற்ற பாரதிய மக்கள் ஐக்கிய கட்சி தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள 40 தொகுதிகளிலும் போட்டியிட போவதாக அறிவித்துள்ளது.

2024 மக்களவைத் தேர்தலில் தனித்து போட்டியிட போவதாக அறிவித்திருந்த நாம் தமிழர் கட்சியின் கரும்பு விவசாயி சின்னம் வேறு மாநில கட்சியான பாரதிய மக்கள் ஐக்கிய கட்சிக்கு ஒதுக்கப்பட்டது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து நாம் தமிழர் கட்சி சார்பில் தொடரப்பட்ட வழக்கு டில்லி உயர் நீதிமன்றத்தில் முடித்து வைக்கப்பட்ட நிலையில், உச்ச நீதிமன்றத்தை தற்போது அந்தக் கட்சியினர் நாடியுள்ளனர்.

இந்நிலையில், அந்தக் கட்சியின் தலைவர் தமிழ்நாடு மாநில தலைவர் ஆர். கே. ஜெயக்குமார் கூறுகையில், நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வேண்டுமானால் எங்களுடன் கூட்டணி சேர்ந்து கொள்ளலாம். அப்போது அவருக்கு கரும்பு விவசாயி சின்னம் வழங்கப்படும். ஆனால், மற்றபடி அவருக்கு 100 சதவீதம் சின்னம் கிடைக்க வாய்ப்பில்லை. அதே போல எங்களுக்கும் பா. ஜ. கவுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை" - என்றார்.

(ஐ)

# குடியுரிமை திருத்தச் சட்டத்தில் மாநிலங்கள் தலையிட முடியாது

## பா. ஜ. கட்சி சொல்கிறது

தூத்துக்குடி, மார்ச் 16

மத்திய அரசுக்கு உரிமையுள்ள குடியுரிமை திருத்தச் சட்டத்தில் எந்த மாநிலங்களும் தனிப்பட்ட முறையில் தலையிட முடியாது என பா. ஜ. க. தேசிய மகளிர் அணி தலைவர் வானதி சீனிவாசன் கூறினார்.

மேலும், பா. ஜ. க தலைமையிலான மத்திய அரசு, முந்தைய ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியை விட தமிழகத்துக்கு அதிக திட்டங்களை கொடுத்துள்ளது. பிரதமர் நாடு முழுவதும் வளர்ச்சி இருக்க வேண்டும் என்ற வகையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார். பிரதமர் தமிழகத் துக்கு வருகையால் பா. ஜ. கவின் வாக்கு சதவீதம் உயர்ந்து வருகி றது.

மத்திய அரசுக்கு உரிமையுள்ள குடியுரிமை திருத்தச் சட்டத்தில் எந்த மாநிலங்களும் தனிப் பட்ட முறையில் தலையிட முடியாது. எனவே குடியுரிமை சட்டத் திருத்தத்தில் ஒவ்வொரு மாநிலமும் தனிப்பட்ட முறையில் எந்த முடிவும் எடுக்க முடியாது. தமிழகத்தில் தி. மு. க. வை வீழ்த்திக் காட்டுவோம் - என்றார்.

(ஐ)

# தேர்தலை புறக்கணிக்க மாட்டோம்!

## பன்னீர்செல்வம்



சென்னை, மார்ச் 16

"மக்களவைத் தேர்தல் நிலைப்பாடு குறித்து வரும் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை" என்று தேர்தலை புறக்கணிக்க போவதாக எழுந்த செய்தி குறித்து முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஓபிஎஸ் விடுத்துள்ள அறிக்கையில், "வருகின்ற மக்களவைத் தேர்தலை புறக்கணிக்கப் போவதாக ஊடகங்களில் வருகின்ற செய்தி முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என்பதையும், இது போன்ற வதந்திகளை, விஷமப் பிரச்சாரங்களை, தவறான தகவல்களை தொண்டர்களும், பொதுமக்களும் நம்ப வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மக்களவைத் தேர்தல் குறித்து எடுக்கப்படும் முடிவு என்னால் மட்டுமே அறிவிக்கப்படும் என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். வருகின்ற மக்களவைத் தேர்தலில் 'இரட்டை இலை' சின்னத்தில்தான் போட்டியிட வேண்டும் என்பது விருப்பம். 'இரட்டை சிலை' சின்னத்தை பெறுவதற்கான சட்ட முயற்சியில் நாங்கள் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறோம். இந்த முயற்சிக்கு விரைவில் வெற்றி கிடைக்கும் என்று நம்புகிறோம் - என்றார்.

(ஐ)

# மகிந்தவின் குடும்பத்தையே வாழ வைத்துள்ளார் ரணில்!

## கூறுகிறார் ரஞ்சித் மத்தும பண்டார



கொழும்பு, மார்ச் 16

**ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தையே வாழ வைத்துள்ளார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்துவ பண்டார தெரிவித்துள்ளார்.**

வவுனியாவுக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாடு மிகவும் மோசமாக சீரழிந்த நிலையில் உள்ளது. மூன்று வேளை சாப்பிட்டவர்கள் இரண்டு வேளையும், இரண்டு வேளை சாப்பிட்டவர்கள் ஒரு வேளையும் சாப்பிடும் வங்குரோத்து நிலை ஏற்பட்டுள்ளது.

பாடசாலையில் இடம்பெறும் விசேட நிகழ்வுகளில் மாணவர்கள் மரணிக்கும் நிலை கூட ஏற்பட்டுள்ளது. வன்னி மாவட்டத்தில் வாழும் மக்கள் பிரதானமாக விவசாயத்தை மையமாக கொண்டு வாழ்கிறார்கள்.

நோயுற்ற நிலையில் வைத்தியசாலை செல்லும் ஹபோது அங்கு மருந்துகள் இல்லாத நிலை உள்ளது. இதனால் பலர் மரணிக்கும் நிலை உள்ளது. சுகாதார அமைச்சராக இருந்த ஒருவர் ஊழல் மோசடி செய்து சிறையில் உள்ளார்.

போசாக்கு இன்றி குழந்தைகள் மோசமான நிலையில் காணப்படுகின்றனர். இந்தநிலைக்கு தற்போதைய அரசாங்கமும் பதில் சொல்ல வேண்டும். ரணில் விக்கிரமசிங்க அவர்களும் ஏனையவர்களும் எமது குழந்தைகள் தொடர்பில் சிந்திக்காது தமது அரசியல் குறித்து சிந்திக்கிறார்கள். இந்த நிலை மாற வேண்டும்.

இன்னும் ஒரு சில மாதங்களில் தேர்தல்கள் வர இருக்கின்றது. மொட்டு சின்னமோ அல்லது ரணிலோ வந்தால் தற்போதைய நிலை தான் நீடிக்கும். ஐக்கிய மக்கள் சக்தியை பலப்படுத்த வேண்டும். கடந்த கடந்த காலத்தில் மக்கள் வீதிக்கு இறங்கி மகிந்த , கோட்டபாய ஆகியோரை வீட்டுக்கு அனுப்பினர். ரணில் விக்கிரமசிங்க மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்தையே வாழ வைத்துள்ளார்-என்றார்.

(அ)

# ‘மக்கள் போராட்டத்தின் எதிரொலி’ நூல் ஜனாதிபதியிடம் கையளிப்பு!



கொழும்பு, மார்ச் 16

நாரஹேன்பிட்டி அபயாராமாதிபதியும் மேல்மாகாண பிரதம சங்கநாயக்க தேரரும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் வேந்தருமான கலாநிதி முருத்தெட்டுவே ஆனந்த தேரரால் எழுதப்பட்ட மக்கள் போராட்டத்தின் எதிரொலி என்ற நூல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேற்று முன் தினம் கையளிக்கப்பட்டது.

நேற்று முன் தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து குறித்த நூலானது ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

முருத்தெட்டுவே ஆனந்த தேரர், ‘இடைவிடாத போராட்டத்தின் உண்மைக் கதை’, ‘சிங்கள மருத்துவத்தின் மறைவு’, ‘நைடிங்கேள் குணாதிசயம்’, ‘ஜெனிவா நெருக்கடியின் எதிரொலிகள்’, ‘ரன் ஹிய’ மற்றும் ‘இருளுக்கு வெளியே’ ஆகிய நூல்களையும் வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# தாய்லாந்து அமைச்சருடன் அலி சப்ரி கலந்துரையாடல்!

கொழும்பு, மார்ச் 16

மியாவாடியில் உள்ள பயங்கரவாத முகாமில் (சைபர் கிரைம்) மீட்கப்பட்ட இலங்கையர்கள் உடனடியாக நாடு திரும்புவது தொடர்பாக ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி மற்றும் தாய்லாந்து வெளிவிவகார அமைச்சர் ஆகியோருக்கு இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த கலந்துரையாடல் தொலைபேசி ஊடாக இடம்பெற்றதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி மியன்மாரில் 56 இலங்கையர்கள் இருப்பதாகவும் அவர்களில் 8 பேர் மீட்கப்பட்டுள்ளதாகவும் மியன்மார் அரசாங்கம் அண்மையில் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இதன்படி குறித்த குழுவை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு தேவையான ஆதரவை வழங்குமாறு தாய்லாந்து வெளிவிவகார அமைச்சரிடம் வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான வசதிகளை வழங்க தாய்லாந்து வெளிவிவகார அமைச்சர் இணக்கம் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் தாய்லாந்தின் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் மீன்பிடித் துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துதல் தொடர்பாகவும் இந்த உரையாடலில் வெளிவிவகார அமைச்சர்கள் கவனம் செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வெளிநாடுகளுக்கு வளங்களை விற்பனை செய்யும் உரிமை ஜனாதிபதிக்கு இல்லை

## மெதகொட அபேதிஸ்ஸ தேரர் சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 16

ஜனாதிபதி நாட்டின் தற்காலிக பொறுப்பாளரே தவிர உரிமையாளர் அல்லர். அதனால் நினைத்த பிரகாரம் நாட்டின் வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்ய அவருக்கு உரிமை இல்லை என மெதகொட அபேதிஸ்ஸ தேரர் தெரிவித்தார்.

‘இந்திய ஆக்கிரமிப்பின் வரைபடம் எட்கா கடைசி மைல்’ புத்தக வெளியீடு கொழும்பில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த தேசத்துக்கு உரித்தான வளங்களை யாருக்கும் கொடுப்பதற்கு ஆட்சியாளர்களுக்கு எந்த உரிமையும் இல்லை. ஆட்சியாளர்கள் என்பது நாட்டை நிர்வகிப்பதற்காக தற்காலிகமாக நியமிக்கப்பட்டவர்களாகும். மாறாக அவர்கள் நாட்டின் முழுமையான உரிமையாளர்கள் அல்லர் என்பதை ஆட்சியாளர்கள் நினைவில் கொள்ளவேண்டும்.

அத்துடன் ஆட்சியாளர்கள் மேற்கொள்ளும் தீர்மானத்துக்கு மக்கள் எதிர்ப்பு தெரிவிக்கும் போது, மக்களின் ஏகபோக உரிமையை தட்டிக்கழிக்கவோ அதனை மீறி செயற்படவோ ஆட்சியாளருக்கு உரிமை இல்லை.

வெளிப்படையாக தெரிவிப்பதாக இருந்தால், மக்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாட்டை பொறுப்பு கொடுக்கவில்லை. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையின்போது, தற்காலிகமாக நாட்டை நிர்வகிப்பதற்கே வழங்கப்பட்டிருக்கிறது.

இது ஒரு கடையின் உரிமையாளர். அந்த கடையில் பணிபுரியும் ஊழியருக்கு தற்காலிகமாக கடையை பார்த்துக் கொள்ள வழங்குவது போலாகும்.

அந்த ஊழியருக்கு கடையில் இருக்கும் பொருட்களை விற்பனை செய்ய முடியுமே தவிர, கடையை விற்க முடியாது. அதனால் ரணில் விக்ரமசிங்க கடந்த காலத்தில் அவரால் செய்ய முடியாமல் போன எட்கா ஒப்பந்தத்தை தற்போது மேற்கொள்ளவே முயற்சிக்கிறார். அதற்கு இடமளிக்க முடியாது-என்றார்.

(அ)

# கைத்தொழில்துறையினருக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 16

நாட்டில் நிர்மாணத் துறையில் ஏற்பட்டுள்ள பிரச்னைகளை உரிய முறையில் ஆராய்ந்து, அதற்கான தீர்வுகளை வழங்கக் கூடிய அறிக்கை ஒன்றை சமர்ப்பிப்பதற்காக நிபுணர் குழுவொன்றை நியமிக்கவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நிர்மாணத்துறையில் உள்ள கைத்தொழில்துறையினருடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

நிதி அமைச்சு, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு என்பவற்றின் செயலாளர்களை உள்ளடக்கி, துறைசார் நிபுணர்களைக் கொண்ட இந்த நிபுணர் குழுவை நியமிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கடன் மறுசீரமைப்புப் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், அடுத்த வருடத்துக்குள் அனைத்து துறைகளிலும் உள்ள கைத்தொழில்துறையினருக்கு நிவாரணம் வழங்கி ஊக்கமளிக்க எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தற்போதைய பொருளாதார நிலைமை மற்றும் தடைப்பட்ட திட்டங்களை மீள ஆரம்பிப்பது, முதலீட்டுக்கு உகந்த சூழலை உருவாக்குதல், நிர்மாணச் சேவைகளை மேம்படுத்துதல் போன்றவற்றின் அடிப்படையில் பாரிய, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஒப்பந்தக்காரர்கள் மற்றும் நிர்மாணத்துறையில் ஈடுபட்டுள்ள தரப்பினர் எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்து ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# பெரிய வெங்காயத்தின் விலை குறைக்கப்படும்!



கொழும்பு, மார்ச் 16

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் பெரிய வெங்காயத்தின் விலையை குறைக்கும் வகையில் கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க வர்த்தக அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பண்டிகைக் காலத்தில் மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்குவது தொடர்பில் அத்தியாவசியப் பொருட்கள் இறக்குமதியாளர்களுக்கும் வர்த்தக அமைச்சருக்கும் இடையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

அதில், இறக்குமதியாளர்கள் தங்கள் கையிருப்பிலுள்ள பெரிய வெங்காயத்தை 450 ரூபா மற்றும் 500 ரூபாவுக்கு இடையில் விற்பனை செய்ய இணக்கம் தெரிவித்துள்ளனர்.

அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதியாளர்களுடனான கலந்துரையாடல் வெற்றியடைந்துள்ளதுடன், போட்டி விலையில் தமது பொருட்களை உள்ளூர் சந்தைக்கு வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

# தயாசிறி ஜயசேகர எம்.பியின் தலைமையில் புதிய கூட்டணி!

**20 ஆம் திகதி ஆரம்ப நிகழ்வு**

கொழும்பு, மார்ச் 16

**சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகரவின் தலைமையில் கூட்டணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.**

'மனிதநேய மக்கள் கூட்டணி' என பெயரிடப்பட்டுள்ள இந்த கூட்டணி எதிர்வரும் 20 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு கொழும்பு - லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச நிலையத்தில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

நாற்பது சிவில் அமைப்புகள் இந்த புதிய கூட்டணிக்கு ஆதரவளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் பதிவு செய்யப்பட்ட கட்சிகள் அன்றைய தினம் இந்த புதிய கூட்டணியுடன் சில ஒப்பந்தங்களை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, புதிய கூட்டணியின் கொள்கைகளுக்கு பிரதான கட்சியொன்று இணங்கும் பட்சத்தில், குறித்த கட்சிக்கு ஆதரவளிக்க தயாராக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு இல்லாத நிலையில், தேசியத் தேர்தலில் மனிதநேய மக்கள் கூட்டணி சார்பில் அதன் தலைவர் தயாசிறி ஜயசேகர ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய கட்சிகளுக்குள் ஏற்கனவே உட்கட்சி பூசல் காணப்படும் நிலையில், இந்த புதிய கூட்டணியில் பலர் இணைவதற்கான சாத்தியம் உள்ளதாக அரசியல் அவதானிகள் எதிர்வு கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# நீதிபதிகளுக்கும் பற்றாக்குறை!

கொழும்பு, மார்ச் 16

நாட்டில் வைத்தியர்களுக்கு பற்றாக்குறை நிலவிவந்த நிலையில் தற்போது நீதிபதிகளுக்கும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் நீதிபதிகளின் வெற்றிடம் அதிகரித்துள்ளமை தொடர்பாகத் தாம் கவலையடைவதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன் இத்தகைய செயபாடானது நீதித்துறை கட்டமைப்பின் செயற்பாடுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றது எனவும், இதன் காரணமாக உயர்நீதிமன்ற நீதியரசர்களின் வெற்றிடங்களை விரைவில் நிரப்ப அரசியலமைப்பு பேரவை மற்றும் ஜனாதிபதி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

(அ)

# அரச வெசாக் மாத்தளையில்!

கொழும்பு, மார்ச் 16

இவ்வருடம் அரச வெசாக் விழாவை மாத்தளை மாவட்டத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான முதற்கட்ட கலந்துரையாடல் நேற்று முன் தினம் மாத்தளை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

அதன்படி, இந்த ஆண்டுக்கான அரச வெசாக் விழாவின் ஆரம்ப விழா மாத்தளை தர்மராஜா பிரிவேனா வளாகத்தில் நடைபெற உள்ளது.

இதன் நிறைவு விழாவை மாத்தளை அனுருத்த அரண வில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நம்பிக்கையில்லாப் பிரேரணை:

# பிரதி சபாநாயகர் தலைமையில் விவாதம் நடத்தப்படவேண்டும்

கொழும்பு, மார்ச் 16

சபாநாயகருக்கு எதிராக எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதமானது சபாநாயகர் தவிர்த்து பிரதி சபாநாயகர் தலைமையில் நடத்தப்படவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் முன்வைத்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்வரும் 19 மற்றும் 20ஆம் திகதிகளில் விவாதிப்பதற்கு கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சபாநாயகருக்கு எதிராக எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவா



தத்தை நடத்த நாம் மூன்று நாட்கள் கோரியிருந்தோம். ஆனால் எமக்கு 2 நாட்கள் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளன.

சபாநாயகர் தவிர்த்து பிரதிச் சபாநாயகர் தலைமையில் விவாதம் நடத்தப்படவேண்டும். பொலிஸ் மா அதிபர் நியமனம் மற்றும் இணையவழி பாதுகாப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்தியமை போன்ற விவகாரங்களில் சபாநாயகர் அரசியலமைப்பை மீறியுள்ளார்.

பாராளுமன்ற சிறப்புரிமைகள் நிலையியற் கட்டளைகளை மீறி செயற்பட்டமை தொடர்பில் பலருக்கும் அவர் மீது அதிருப்தி ஏற்பட்டுள்ளது-என்றார்.

# நாணய நிதியத்தின் ஒப்பந்தம் எமது ஆட்சியில் மீள்பரிசீலனை

**கூறுகிறார் டிலான் பெரேரா**

எமது ஆட்சியில் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் மீள்பரிசீலனை செய்யப்படும் என சுதந்திர மக்கள் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஆரம்பத்தில் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தத்திற்கு செல்லும் போது சர்வதேச நாணயநிதியத்துடன் அரசாங்கம் மேற்கொண்ட ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக எதிர்க்கட்சிகளுக்கு அறியத்தருமாறு ஜனாதிபதியிடம் நாம் கோரியிருந்தோம்.

ஆனால் அரசாங்கம் அப்போது அதனை செய்யவில்லை. அதன் காரணமாகவே சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடலை எதிர்க்கட்சிகள் புறக்கணித்தன. தற்போது அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திட்டுள்ளதுடன் நாட்டில் வரியையும் அதிகரித்துள்ளது.

மத்திய வங்கியை சுயாதீனப்படுத்தியுள்ளது. இதனூடாக மத்திய வங்கி ஆளுநர் தன்னிச்சையாக தீர்மானங்களை மேற்கொள்கின்றார். தற்போதைய அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டு அதன் வேலைத்திட்டத்தையும் நடைமுறைப்படுத்தியது. அத்துடன் மக்கள் மீது அதிக சுமையை சுமத்தியுள்ளது.

தற்போது அதில் எதிர்த்தரப்பினரையும் உள்வாங்க திட்டமிடுகிறது. எனவே அரசாங்கத்தின் சூழ்ச்சி வலைக்குள் சிக்க நாம் விரும்பவில்லை. எமது நாட்டுக்கு சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டம் அவசியமாகின்றது.



ஆயினும் ஒரு சில நிபந்தனைகள் தவிர்க்கப்படவேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்ற உலகின் ஏனைய சில நாடுகள் நிபந்தனைகளை மீள் பரிசீலனை செய்துள்ளன. ஆனால் இலங்கை அவ்வாறு செய்யவில்லை. தேர்தல் ஒன்றுக்கு செல்லும் போது மக்கள் சில தீர்மானங்களை அறிவிப்பார்கள். எமது ஆட்சியில் மக்கள் ஆணையுடன் சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தம் மீள்பரிசீலனை செய்யப்படும்-என்றார்.

(அ)

# தமிழர் தாயகக் கோட்பாட்டை சிதைக்கின்றது பேரினவாதம்

**தமிழ் சிவில் சமூக அமையம் குற்றச்சாட்டு**

யாழ்ப்பாணம், மார்ச் 16

திரிக்கப்பட்ட தொல்பொருள் ஆய்வு முடிவுகளை வெளியிடுவதன் மூலம் வடக்கு-கிழக்கு தமிழர்களின் தாயகம் என்ற கோட்பாட்டைச் சிதைப்பதே பேரினவாதத்தின் முதன்மை நோக்கமாக இருப்பதாக தமிழ் சிவில் சமூக அமையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்-

தமிழர் தாயகமான வடக்குக் கிழக்கில் இவ்வாறான விஞ்ஞான பூர்வமற்ற, திரிக்கப்பட்ட தொல்பொருள் ஆய்வு முடிவுகளை வெளியிடுவதன் மூலம் வடக்கு-கிழக்கு தமிழர்களின் தாயகம் என்ற கோட்பாட்டைச் சிங்கள-பௌத்த பேரினவாதம் சிதைத்து வருகின்றது.

சிங்கள-பௌத்த மயமாக்கல் மூலமாக சிங்கள-பௌத்தர்களின் பாரம்பரிய வாழிடமாக வடக்கு-கிழக்கைக் மாற்றியமைத்து, தமிழர் தாயகத்தை ஆக்கிரமிப்பதே சிங்கள-பௌத்த பேரினவாதத்தின் முதன்மை நோக்காக இருந்து வருகின்றது.

அரசின் அனுசரணையிலான விவசாயக் குடியேற்றத்திட்டங்கள் போலவே தமிழர் பகுதிகளில் இவ்வாறு பௌத்த தொல்பொருட் சின்னங்களைக் கண்டடைவது என்பதுவும், தமிழர்களின் தாயகத்தைச் சிங்களக் குடியேற்றங்கள் மூலம் ஆக்கிரமிப்பதற்கான முதற்படியாக எப்போதும் இருந்து வருகின்றமையே இவ்வாறான நடவடிக்கைகள் தமிழ் மக்கள் மத்தியில் தமது இருப்புத் தொடர்பான அச்சத்தை ஏற்படுத்த காரணமாகின்றது.

இவ்வாறான பல நூற்றுக்கணக்கான வேலைத்திட்டங்களுள் வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விவகாரமும் ஒன்று.

சிங்கள-பௌத்த அரசியற் தலைவர்கள் பேசினாலும், அவர்களது செயற்பாடுகளும், இவ்வாறான நிகழ்வுகளின் போதான அவர்களின் மௌனங்களும் இன வெறுப்பூட்டும் பேச்சுகளும் இன நல்லிணக்கத்திற்கு எதிரான திசையிலேயே அமைந்துள்ளது-என்றுள்ளது.

# 19 ஆம், 20ஆம் திகதிகளில் மீண்டும் வேலைநிறுத்தம்!

**சுகாதாரத் தொழிற்சங்க கூட்டணி அறிவிப்பு**

கொழும்பு, மார்ச் 16

நாடளாவிய ரீதியில் மீண்டுமொரு வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக சுகாதார தொழிற்சங்க கூட்டணி அறிவித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் 19 மற்றும் 20 ஆகிய திகதிகளில் வேலைநிறுத்த போராட்டம் முன்னெடுக்கவுள்ளதாக சுகாதார தொழிற்சங்க கூட்டணியின் இணை ஏற்பாட்டாளர் சானக தர்மவிக்ரம தெரிவித்தார்.

கடந்த பெப்ரவரி மாதம் 13ஆம், 14 ஆம் திகதிகளில் 72 சுகாதார தொழிற்சங்கங்கள் இணைந்து பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்திருந்தன.

வைத்தியர்களுக்கு வழங்கப்பட்ட 35 ஆயிரம் ரூபா கொடுப்பனவை தமக்கும் வழங்குமாறு கோரி சுகாதார தொழிற்சங்கத்தினர் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இதனையடுத்து தங்களது கோரிக்கை தொடர்பிலான அறிக்கை சுகாதார அமைச்சினால் நிதியமைச்சிடம் வழங்கப்பட்டபோதிலும் இதுவரை உரிய தீர்வு முன்வைக்கப்படவில்லை எனவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தொழிற்சங்க நடவடிக்கையை தற்காலிகமாக நிறுத்தி, நிதியமைச்சு மற்றும் சுகாதார அமைச்சிற்கு காலஅவகாசம் வழங்கப்பட்ட போதிலும் இதுவரை தீர்வு வழங்கப்படவில்லை எனவும் சுகாதார தொழிற்சங்க கூட்டணியின் இணை ஏற்பாட்டாளர் சானக தர்மவிக்ரம குறிப்பிட்டார்.

(அ)

# கிளிநொச்சி மத்திய பஸ் நிலைய வளாகத்தில் சட்டத்திற்கு புறம்பாக வியாபார நிலையங்கள்

## தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் வெளிப்பட்டது

**கிளிநொச்சி, மார்ச் 16**

**புதிதாக அமைக்கப்பட்டுள்ள கிளிநொச்சி மத்திய பஸ் நிலைய வளாகத்தில் சட்டத்திற்கு புறம்பாக 25 வரையான வியாபார நிலையக் கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றமை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் தெரியவந்துள்ளது.**

கரைச்சி பிரதேச சபையிடம் ஊடகவியலாளர் ஒருவர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கு ஊடாக கோரப்பட்ட தகவல்களுக்கு கிடைக்கப் பெற்ற பதில்கள் மூலம் மேற்படி சட்டவிரோதமாக வியாபார நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றமை வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

கரைச்சி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டடங்கள் அமைக்கப்படுவதாக இருப்பின் பிரதேச சபையின் கட்டட அனுமதி பெறப்படல் வேண்டும். இது சட்டம். ஆனால் பஸ் நிலையத்திற்குள் அமைக்கப்பட்டு வருகின்ற 25 வரையான கட்டடங்களுக்கு கட்டட அனுமதி உட்பட எவ்வித அனுமதியும் கரைச்சி பிரதேச சபையிடம் பெறப்படவில்லை. அத்தோடு வியாபார நிலையங்களுக்குரிய பயனாளிகள் தெரிவு தங்களால் மேற்கொள்ளப்படவில்லை. தங்களிடம் பெயர்ப் பட்டியல்கள் இல்லை எனவும் கரைச்சி பிரதேச சபை தகவல்

அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக கோரப்பட்ட தகவல்களுக்கு பதில் வழங்கியுள்ளது. (அ)

# சபாநாயகருக்கு எதிராக ஜே.வி.பி. வாக்களிக்கும்!

## விஜித ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 16

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவு வழங்க தாம் தீர்மானித்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவு வழங்க நாம் தீர்மானித்துள்ளோம்.

வாக்கெடுப்பில் சபாநாயகருக்கு எதிராக நாம் வாக்களிப்போம். கடந்த காலங்களில் சபா



நாயகர் செயற்பட்ட விதம் மிகவும் தவறானது. பொலிஸ் மா அதிபர் நியமனம் விடயத்தில் அவர் செயற்பட்டமை சட்டவிரோதமானது.

சபாநாயகர் அரசியலமைப்பையும் பாராளுமன்ற சிறப்புரிமைகளையும் மீறிச் செயற்பட்டுள்ளார்-என்றார். (அ)

# காற்றாலை மின்சார ஒப்பந்தம் அதானி நிறுவனத்துடன் பேச்சு

கொழும்பு, மார்ச் 16

காற்றாலை மின் உற்பத்தி திட்டத்துக்கான ஒப்பந்தம் தொடர்பில் அதானி நிறுவனத்துக்கும், மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சுக்கும் இடையில் பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அதானி கிரீன் எனர்ஜி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சாகர் அதானி மற்றும் அதானி எனர்ஜி சொல்யூஷன்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும், பிரதம செயல்பாட்டு அதிகாரியுமான அனில் சர்தானா ஆகியோர் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவை நேற்று முன் தினம் வியாழக்கிழமை சந்தித்துள்ளனர்.

மன்னார் மற்றும் பூநகரியில் 484 மெகாவாட் காற்றாலை



ஆற்றல் மின் உற்பத்தி திட்டத்துக்கான மின்சார கொள்முதல் ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் மற்றும் கலந்துரையாடல்களில் பங்கேற்பதற்காக அதானி கிரீன் எனர்ஜியின் அதிகாரிகள் இலங்கை வந்துள்ளதாக அமைச்சர் காஞ்சன விஜே சேகர குறிப்பிட்டுள்ளார்.

இத்திட்டத்தின் மூலம் மன்னாரில் 250 மெகாவாட் மின்சாரமும், பூநகரியில் 234 மெகாவாட் மின்சாரமும் தேசிய மின் கட்டமைப்பில் சேர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ)

# மோசடிகள் நிறைந்த ஆட்சியை முடிவுக்கு கொண்டுவரவேண்டும்

## நாணய நிதியத்திடம் சுனில் ஹந்துனெத்தி

கொழும்பு, மார்ச் 16

ஊழல் மோசடிகள் நிறைந்துள்ள ஆட்சியை முடிவுக்கு கொண்டுவர வேண்டுமென சர்வதேச நாணய நிதியத்திடம் தான் வலியுறுத்தியதாக தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்தார்.

நாட்டுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கும் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களுக்கும் இடையிலான விசேட சந்திப்பு நேற்று முன் தினம் இடம்பெற்றுள்ளது.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே சுனில் ஹந்துனெத்தி இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்கள் ஆணையில்லாத அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதில் பலனில்லை. இந்த அரசாங்கம் ஆட்சியில் தொடருமானால் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிகளுக்கும் தீர்வு கிடைக்கப் போவதில்லை.

உதாரணமாக நாங்கள் ஒரு விடயத்தை கூறலாம். பாராளுமன்றில் கோப் குழுவின் தலைவராக ரோஹித அபேகுணவர்தனவை நியமித்துள்ளார்கள். இதனுடாக அரசாங்கத்தின் நோக்கம் தொடர்பாகவும் நாம் கவனம் செலுத்தியுள்ளோம். நெருக்கடி நிலையிலிருந்து



மக்களை கரை சேர்க்கவேண்டும். அதற்காக மக்கள் ஆணையுடன் அரசாங்கம் ஒன்று அமைக்கப்படவேண்டும்.

அதேபோன்று கடன் மறுசீரமைப்பு விடயத்தின் தற்போதைய நிலவரம் தொடர்பாகவும் உத்தியோகபூர்வமாக அறிவிக்க முடியாத நிலையில் அரசாங்கம் உள்ளது. எனவே இந்த விடயம் தொடர்பாக நாணய நிதியத்திடம் நாம் பிரதானமாக வினவியிருந்தோம்-என்றார். (அ)

# வடக்கின் அபிவிருத்திக்கென பல மில்லியன் நிதியை வழங்கும் இந்தியா, சீனா, ஜப்பான்!

## சந்தர்ப்பங்களை சரியாக பயன்படுத்துவது அவசியம் என்கிறார் அமைச்சர் டக்ளஸ்



யாழ்ப்பாணம், மார்ச் 16

வடபகுதியின் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகப் பல மில்லியன் நிதியை வழங்க சீனா, இந்தியா, மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் முன்வந்துள்ளதாகத் தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிடைக்கப்பெறும் சந்தர்ப்பத்தைச் சரியானதாக பயன்படுத்திக்கொள்வது அவசியம் எனவும் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்-

பாரிய பொருளாதார நெருக்கடியை நாடு சந்தித்திருந்தாலும் தற்போதுள்ள அரசின் சரியான அரசியல் வழிநடத்தல் காரணமாக அந்த நிலையிலிருந்து நாடு தற்போது மீண்டு வருகின்ற நிலையில் வடக்கின் அபிவிருத்திக்கு இன்றைய அரசு அதிகளவான முக்கியத்துவம் கொடுத்து வருகின்றது.

அதன் அடிப்படையில் வெளி நாடுகளுடன் நாம் குறித்த நாடுகளுடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள இராஜதந்திர நடவடிக்கைகளின் பயனாக வடக்கின் அபிவிருத்திக்காக சீனா 1500 மில்லியன் நிதியை வழங்க முன்வந்துள்ளது.

குறித்த 1500 மில்லியனில் வீட்டுத்திட்டத்துக்காக 500 மில்லியனும், மக்களுக்கு அரிசி வழங்குவதற்காக 500 மில்லியனும், கடற்றொழிலாளர்களுக்கான வலை வழங்குவதற்காக 500 மில்லியனும் வழங்கப்படுகின்றது.

குறிப்பாக பிரதமர் தினேஸ் குணவர்த்தன எதிர்வரும் 22 ஆம் திகதி சீனா செல்கின்றார். இதற்கான ஒப்பந்தத்தை சீனா செல்லும் பிரதமர் எதிர்வரும் வாரம் கைச்சாத்திடுவார் என நம்புகின்றேன்.

இதேநேரம் இந்திய அரசும் வடபகுதியின் அபிவிருத்திக்காக 3000 மில்லியன் நிதியை வழங்க முன்வந்துள்ளது.

குறிப்பாக கடல் ஆய்வு நடவடிக்கைகள், கடற் பகுதியில் பாரியளவிலாள கூடுகளில் மீன் வளர்ப்பதற்கான திட்டங்கள் மக்களுக்கான அபிவிருத்தி நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கென இந்த நிதி வழங்கப்படுகின்றது.

இதேவேளை ஜப்பான் அரசும் வடக்கின் அபிவிருத்தி மற்றும் மக்களின் கடற்பாதுகாப்பு செயற்திட்டங்களுக்காக 415 மில்லியன் வழங்க முன்வந்துள்ளது.

அந்தவகையில் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை நாம் எமது மக்களுக்கானதாக சரியான வகையில் கொண்டுசென்று மக்களின் வாழ்வியலில் சிறப்பான மாற்றத்தை உருவாக்க வேண்டும்-என்றார். (அ)

# ஹரக் கட்டா மற்றும் குடு சலிந்துவின் கைபேசிகள், கடவுச்சீட்டுக்கள் மாயம்!

கொழும்பு, மார்ச் 16

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளான குடு சலிந்து மற்றும் ஹரக் கட்டா ஆகியோரின் இரண்டு கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் இரண்டு கடவுச்சீட்டுகளும் காணாமல் போயுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் பொலிஸ் தலைமையகத்தின் பயங்கரவாத புலனாய்வு பிரிவு மற்றும் விசேட புலனாய்வு பிரிவினரால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஹரக் கட்டா மற்றும் குடு சலிந்து ஆகியோர் மடகஸ்கரில் கைது செய்யப்பட்டதன் பின்னர், இருவரும் 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதி இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட போது, இந்த இரண்டு தொலைபேசிகளும் கடவுச்சீட்டுகளும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பிடியில் இருந்ததாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சந்தேகநபர்கள் இருவரையும் இலங்கைக்கு அழைத்து வந்த பின்னர், கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் கடவுச்சீட்டுகள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பொது முறைப்பாடுகள் விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் பிடியில் இருந்த இந்த இரண்டு கையடக்கத் தொலைபேசிகளும் இரண்டு கடவுச்சீட்டுகளும் எந்தத் திகதியில் காணாமல் போயிருந்தன என்பது தெரியவரவில்லை என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த தொலைபேசிகளில் முக்கியமான காட்சிகள், பல்வேறு போதைப்பொருள் வியாபாரிகள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளின் தொலைபேசி எண்கள் போன்றவை இருந்ததாக குற்றப் புலனாய்வுத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

# பொத்துவில் கோமாரிப் பகுதியில் யானை தாக்கி வெளிநாட்டவர் பலி!

அம்பாறை, மார்ச் 16

**பொத்துவில் கோமாரி பகுதியில் 52 வயது மதிக்கத்தக்க ஒரு வெளிநாட்டு சுற்றுலா பயணியொருவர் யானையால் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.**

இச் சம்பவம் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் கோமாரி களுகொல்ல இடம்பெற்றுள்ளது.

நேற்று அதிகாலை குறித்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணி சகபாடிகளுடன் மோட்டார் சைக்கிளில் கோமாரி கடலை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தவேளை திடீரென்று வீதியால் வந்த யானை அவரை தாக்கியுள்ளது. ஏனையோர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இவரது சடலம் பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# சாதனை மாணவன் தினுக்சன் பாராட்டி கௌரவிப்பு



காரைதீவு, மார்ச் 16

அகில இலங்கை பாடசாலை மாணவர்களுக்கிடையிலான சிறுவர் சித்திரப்போட்டியில் சாதனை படைத்த சம்மாந்துறை கோரக்கர் தமிழ் மகா வித்தியாலய மாணவன் ரீ.தினுக்சன் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

சம்மாந்துறை ஸ்ரீ கோரக்கர் தமிழ் மகாவித்தியாலயத்தில் இருந்து மாகாண மட்டத்தில் மூன்றாவது இடத்தைப் பெற்ற ரீ. தினுக்சன் என்ற மாணவனுக்கு அதிபர் எஸ். இளங்கோபன் தலைமையில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

பிரதம அதிதியாக சம்மாந்துறை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி நிதர்சினி மகேந்திரக்குமார் சான்றிதழை வழங்கி வைத்தார்.

நிகழ்வில் உதவிக் கல்விப் பணிப்பாளர் எச். நைறூஸ் கான், கோட்டக் கல்விப் பணிப்பாளர்களான ஏ. நசீர், பி. பரமதயாளன், சித்திர பாட வளவாளர் எஸ்.எல். அப்துல் முனாப், பாடசாலையின் அதிபர் எஸ். இளங்கோபன், சித்திரம் பாட ஆசிரியை செல்வி. என். லிசாந்தனி ஆகியோர் பங்கேற்றனர்.

# சாய்ந்தமருது அல்-ஜலாலில் சர்வதேச கணித தின நிகழ்வு



அம்பாறை, மார்ச் 16

ஐக்கிய நாடுகள் நாடுகள் யுனெஸ்கோ அமைப்பினால் 2020 ஆம் ஆண்டு தொடக்கம் வருடா வருடம் மார்ச் 14 ஆம் திகதி சர்வதேச கணித தின நிகழ்வுகள் நடத்தப்பட வேண்டும் என்ற தீர்மானத்திற்கமைய இவ்வருடம் "கணிதத்துடன் விளையாடுவோம்" எனும் தொனிபொருளில் நடைபெறும் சர்வதேச கணித தின நிகழ்வுகள் சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீமின் அறிவுறுத்தலுக்கமைய கணிதபாட உதவிக் கல்விப்பணிப்பாளர் ஏ. சஞ்சீவனின் வழிகாட்டலில் பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.சைபுதீன் தலைமையில் கணித தின நிகழ்வுகள் இடம்பெற்றன.

நோன்பு கால விடுமுறையை கருத்தில் கொண்டு பாடசாலையின் கணிதக் கழக மாணவர்களின் பங்களிப்புடன் நடைபெற்ற நிகழ்வில் கணித தினம் தொடர்பாகவும் கணிதத்தின் முக்கியத்துவம் தொடர்பாகவும் மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டு, கணிதத்துடன் விளையாடுவோம் எனும் தொனிபொருளுக்கு இணங்க கணிதப்பூங்காவில் மாணவர்கள் கணித விளையாட்டுக்களில் ஈடுபடுத்தப்பட்டனர்.

(அ)

# இறால் பண்ணையாளர்களுக்கு ஆளுநரினால் காணி ஒதுக்கீடு!



மட்டக்களப்பு, மார்ச் 16

கிழக்கு மாகாணத்தின் மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூர் விவசாயிகளின் சிறிய அளவிலான இறால் பண்ணை திட்டங்களுக்கான காணிகளை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஒதுக்கீடு செய்தார்.

மண்முனை தென்மேற்கு பிரதேசசெயலகம் பட்டிப்பளையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் சாதாசிவம் வியாழேந்திரனும் கொண்டார்.

இதன்போது பயனாளிகளுக்கான காணி அனுமதிப்பத்திரங்கள் ஆளுநரால் வழங்கி வைக்கப்பட்டன. (அ)

# வாகரையில் சிறுமி துஷ்பிரயோகம் 4 சிறுவர்கள் பிணையில் விடுவிப்பு

## இளைஞனுக்கு விளக்கமறியல்

மட்டக்களப்பு, மார்ச் 16

மட்டக்களப்பு வாகரையில் 7 வயது சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தியமை தொடர்பாக கைது செய்யப்பட்ட 4 சிறுவர் உட்பட்ட 5 பேரில், 4 சிறுவர்களையும் பிணையில் விடுவித்ததுடன், 18 வயதுடைய இளைஞரை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வாழைச்சேனை நீதவான் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டார்.

வாகரை பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசத்தில் கணவனை இழந்த தாயார் ஒருவர் அவரது 7 வயது மகளை வீட்டில் தனியாக விட்டுவிட்டு தினமும் வேலைக்கு சென்றுவரும் நிலையில் சிறுமியுடன் விளையாடிய 11 வயது சிறுவன் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து குறித்த சிறுவன் 14,15 மற்றும் 18 வயதுடைய சிறுவனின் நண்பர்களும் பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்டுள்ள நிலையில், இதனை அவதானித்த அந்தப் பகுதி இளைஞர் ஒருவர் சிறுமியின் தாயாருக்கு தெரியப்படுத்தியுள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட சிறுமியின் தாயார் பொலிஸாரிடம் முறையிட்டதையடுத்து 11 வயதுடைய ஒருவர், 14 வயதுடைய இருவர், 15 வயதுடைய ஒருவர், 18 வயதுடைய ஒருவர் உட்பட 5 பேரை கைது செய்ததுடன் பாதிக்கப்பட்ட சிறுமியை வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

இதில் கைது செய்யப்பட்டவர்கள் வாழைச்சேனை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து 15 வயதுக்குட்பட்ட 4 சிறுவர்களையும் சட்ட வைத்தியரிடம் சோதனைக்குட்படுத்துமாறும் அடுத்த வழக்கிற்கு ஆஜராகுமாறும் பிணையில் விடுவித்ததுடன் 18 வயதுடையவரை எதிர்வரும் 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

(அ)

# அடுத்த தேர்தலில் மக்கள் ஆணை கிடைத்தால் நீர்ப்பாசன அமைச்சை நான் பெறவேண்டும்!

## கூறுகின்றார் பிள்ளையான்

மட்டக்களப்பு, மார்ச் 16

எதிர்வரும் தேர்தலில் மக்களின் ஆணை கிடைத்தால் நீர்ப்பாசன அமைச்சு தான் பெற வேண்டும் என்பது எமது இலக்கு என்று இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் தெரிவித்துள்ளார்.

உன்னிச்சை வலது கரை வாய்க்கால் பால திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பசுமைப் பொருளாதாரத்தை கட்டி எழுப்பதற்காகவே உலக வங்கியினால் 25 கோடி ரூபாய் மத்திய நீர்ப்பாசனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. உயர்ந்த சம்பளத்திற்காக போராடும் கிழக்குப் பல்கலைக்கழகம் விவசாய அபிவிருத்திக்கு சிறப்பாக செயல்படவில்லை.

உற்பத்தித் துறையை நாம் அதிகரிக்கச் செய்ய வேண்டுமானால் மக்களுக்கு அறிவு சார்ந்த விடயங்களில் தெளிவு வேண்டும்.

ஜனாதிபதி கூறியதைப் போன்று அரசியல் பொருளாதார கட்டமைப்புக்களை திறம்பட நடைமுறைப்படுத்த நீர்ப்பாசனமும் வீதிகளும் இன்றியமையாததாகும்.

நீர்ப்பாசன வீதி அபிவிருத்தி பணிகள் இவ்வருடத்தில் மெதுவாக முன்னெடுக்கப்பட்டாலும் அடுத்த வருடத்தில் மிகப் பெரிய பணிகள் முன்னெடுக்கப்பட உள்ளது.

நாட்டின் நிலைமை தற்போது சிறப்பாக உள்ளது, டொலரின் பெறுமதி அதிகரித்துள்ளதுடன் சுற்றுலாத் துறையும் வளர்ச்சி அடைந்து வருகிறது.

உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அடையும் போது பின்தங்கிய பிரதேச மக்களின் வாழ்வாதாரமும் உயர்வடையும்,கிழக்குப் பல்கலைக்கழகம் விவசாய அபிவிருத்திக்கு சிறப்பாக செயல்படவில்லை.

உயர்ந்த சம்பளத்திற்காக போராடும் அவர்கள் எனது கையால் வழங்கப்பட்ட மண்ணுக்குரிய அறிக்கையினை இது வரை வழங்கவில்லை.

எனக்கே இவ்வாறான நிலைமை என்றால் மக்களின் நிலையை யோசித்துப் பாருங்கள். கல்வியில் உயர் பீடத்தில் உள்ள அவர்களின் நிலை இவ்வாறு இருந்தால் விவசாயிகள் எவ்வாறு உயர முடியும்.

இதற்கு கிராம மட்டங்களில் சிறப்பான திட்டங்களை முன்னெடுக்க வேண்டியுள்ளது. அப்போதுதான் சிறந்த மாற்றத்தினை நாம் காண முடியும்-என்றார்.

ஈழநாடு



# பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக் மீது பழமைவாத கட்சியினர் அதிருப்தி

## ஆயினும் அவர் பதவியில் தொடருவார்

**லண்டன், மார்ச் 16**

**பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக்கின் பதவியில் மாற்றம் மேற்கொள்ள அவசியம் இல்லை என பழமைவாதக் கட்சியினர் முடிவு செய்துள்ளனர்.**

**ரிஷி சுனக் 16 மாதங்களுக்கு முன்னர் பிரதமராகப் பதவி ஏற்றது முதல் அக்கட்சியினர் அவருக்கு ஆதரவு அளித்து வருகின்றனர்.**



தனித்தனியாகக் கூடி ஆலோசனை நடத்தினர் என்றாலும், அண்மையில் அவரை மாற்ற வேண்டும் என்ற அடிப்படையில் பழமைவாதக் கட்சியினர் சில கருத்துகளை வெளியிட்டு வந்தனர்.

ஆயினும், தலைமைத்துவ மாற்றம் அரசியல் பாதிப்பை உருவாக்கக்கூடும் என்று கட்சியினர் ஆலோசித்ததன் பிரகாரம் தற்போதைக்கு எவ்வித மாற்றங்களும் அவசியம் இல்லையென தீர்மானித்துள்ளனர்.

அண்மைக் காலமாக அமைச்சரவை அமைச்சர்கள் தனித்தனியாகக் கூடி ஆலோசனை நடத்தினர்.

அரசியல் முடிவுகளை சுனக்கால் எடுக்க முடியவில்லை

2025ஆம் ஆண்டு தேர்தலுக்கு முன்னர் சுனக் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்படுவாரா என்ற சந்தேகத்தை அது உருவாக்கியது.

எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சியின் எழுச்சியைத் தடுத்து நிறுத்தத் தற்காலிகப் பிரதமர் நியமிக்கப்படுவாரா என்ற கேள்வியும் எழுந்தது.

ஆளும் கட்சிக்குச் சாதகமான அரசியல் முடிவுகளை சுனக்கால் விரைந்து எடுக்க முடியவில்லை என்பதை உணர்த்தும் சில சம்பவங்களின் தொடர்ச்சியே அத்தகைய பேச்சுகளுக்குக் காரணமாகச் சொல்லப்பட்டது.

வரி குறைப்பு தொடர்பான புதிய வாக்குறுதிகளை வெளியிடாதது, ஆளும் கட்சி நன்கொடையாளரின் இனவாதக் கருத்து தொடர்பான பூசலுக்கு முடிவு காணாதது போன்றவை அதனுள் அடங்கும்.

என்றாலும் சுனக்கை மாற்றும் நடவடிக்கையை பழமைவாதக் கட்சியினர் தற்போது கைவிட்டுள்ளனர். (அ)

# ரஷ்ய போர் நடவடிக்கைக்கு எதிராக ஐரோப்பா தக்க பதிலளிக்கவேண்டும்

## பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் கருத்து



*பாரிஸ், மார்ச் 16*

ரஷ்யாவின் போர் நடவடிக்கைக்கு எதிராக ஐரோப்பா பதிலளிக்கவேண்டும் என பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் தெரிவித்துள்ளார்.

புனித லுசியா பேராலயத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனை அவர் குறிப்பிட்டிருந்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், கடந்த இரண்டு வருடமாக ரஷ்யா உக்ரைன் மீது போர் தொடுத்துவருகின்றது. பல்வேறு அழுத்தங்கள் ஏற்படுத்தப்பட்ட போதிலும் அதனை நிறுத்த ரஷ்யா முன்வரவில்லை. ஆகவே, ஐரோப்பா ஒன்றும் பலவீனமானது அல்ல. அதற்கு தக்க பதிலளிக்க வேண்டும்-என்றார்.

இதேவேளை கடந்த மாதம் உக்ரைனுக்கு ஆதரவாக ஐரோப்பிய நாடுகள் தமது இராணுவத்தினரை அனுப்பப் போவதாக தெரிவித்த கருத்தினை அவர் ஏற்றுக்கொள்ளாத நிலையில், ரஷ்யா தொடர்பில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு வருடங்களாக ரஷ்ய-உக்ரைன் போர் நடைபெற்றுவரும் நிலையில் அமெரிக்க உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் பலவும் உக்ரைனுக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# டைட்டானிக் சிதைவை தேடி மீண்டும் பயணம்

## உரிய வழிமுறைகள் பின்பற்றப்படும்



*நியூயோர்க், மார்ச் 16*

கடலில் மூழ்கிய டைட்டானிக் கப்பலின் சிதைவுகளைத் தேடி கண்டுபிடிக்கும் வகையில் திட்டமிட்ட பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக அமெரிக்க அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் டைட்டானிக் சிதைவுகளைத் தேடிச் சென்ற 'டைட்டன்' என்ற நீர்மூழ்கிக் கப்பல் வெடித்து விபத்துக்குள்ளாகியிருந்தது. விபத்தினால் நீர்மூழ்கிக் கப்பலில் பயணித்த ஐந்து பேர் உயிரிழந்திருந்தனர்.

டைட்டானிக் சிதைவுகளை நோக்கி பயணத்தினை மேற்கொண்டிருந்த டைட்டன் நீர்மூழ்கிக் கப்பல் சிதைவுகளை அடைவதற்கு ஐந்து மணி நேரத்திற்கு முன்னதாக வெடித்து சிதறியது.

அந்த வகையில் எதிர்வரும் காலங்களில் சிதைவு தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதாயின் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் சட்ட விதிகளின் பிரகாரம் செயற்படவுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதேவேளை ஆய்வு பயணத்தை எதிர்வரும் மே மாதம் தொடங்கவுள்ளது. இதனை உதவி சட்டமா அதிபர் கென்ட் போர்டர் வெர்ஜினியா உயர் நீதிமன்றத்திடம் தெரிவித்திருந்தார். (அ)

# காசாவில் நிவாரணம் பெறுவதற்கு சென்றவர்கள் மீது துப்பாக்கிச் சூடு!

## 6 பேர் உயிரிழப்பு

*ஜெருசலேம், மார்ச் 16*

காசா மீதான இஸ்ரேல் இராணுவத்தின் தாக்குதலானது தொடர்ச்சியாக நீடித்து வரும் நிலையில் நிவாரணப் பொருட்களை பெற்றுக்கொள்வதற்காகக் குவிந்த மக்கள் மீது இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் நடத்தியதில் 6 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காசா மீது இஸ்ரேல் இராணுவம் நடத்திவரும் போரினால் அப்பகுதியில் கடுமையான பஞ்சம் நிலவி வருகின்றது. அத்துடன் வீடுகளை இழந்து தவிக்கும் மக்களுக்கு போதிய அளவில் உணவு மற்றும் உதவிப் பொருட்கள் கிடைக்காமையினால் அம்மக்கள் பெரும் இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இதேவேளை பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு பல்வேறு போராட்டங்களுக்கு மத்தியில் ஐ.நா. சார் அமைப்புகளால் உணவு மற்றும் நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.



இந்நிலையில் நேற்றைய தினம் வடக்கு காசா நகரில் நிவாரணப் பொருட்களை வாங்குவதற்காக காத்திருந்தவர்கள் மீது இஸ்ரேல் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் 80 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர் எனவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சிகிச்சைகளின் பின்னர் வீடு திரும்பினார் மம்தா

*புதுடில்லி, மார்ச் 16*

இந்தியாவின் மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி, சிகிச்சைகளின் பின்னர் வீடு திரும்பியுள்ளார்.

அவர் தமது வீட்டில் வீழ்ந்த நிலையில் அவரது நெற்றியில் காயம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து மம்தா பானர்ஜி, தனியார் வைத்திய சாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவருக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இந்தநிலையில், அவர் விரைவில் குணமடைய வேண்டும் என இந்திய பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்டோர் பிரார்த்தனை செய்வதாக தெரிவித்துள்ளனர்.

இந்திய மத்திய அரசாங்கத்தினால், அண்மையில் நடைமுறைப்படுத்தப்பட்ட குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு மம்தா பானர்ஜி எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)





# இது மொட்டு கட்சி ஆட்சிதானா என்பதில் எனக்கும் சந்தேகமே!

## கூறுகின்றார் பஸில் ராஜபக்ஷ

கொழும்பு, மார்ச் 16

**இது பொதுஜன பெரமுன கட்சியின் ஆட்சிதானா என்ற சந்தேகம் எமக் கும் உள்ளது. பசுவின் முன்பகுதி மட்டுமே எங்கள் வசம் உள்ளது. பின் பகுதி வேறு இடத்தில்தான் உள்ளது - என்று பொதுஜன பெரமுன கட் சியின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.**



அத்துடன், ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தல்களை ஒத்திவைக்க இடமளிக்கப்போவதில்லை எனவும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பொதுத் தேர்தல் நடத்தப்படவேண்டும் எனவும் அவர் கூறினார்.

சிங்கள தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இதனை கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

தேர்தலை பிற்போடுவதற்கு நாம் எதிர்ப்பு. ஜனாதிபதி, பொதுத்தேர்தல் என்பன உறுதி காலப்பகுதிக்குள் நடத்தப்பட வேண்டும் என்ற உறுதியான நிலைப்பாட்டில் இருக்கின்றோம். அதற்காக முன்னிலையாவோம். தேர்தல் நடக்குமா என்ற சந்தேகம் எமக்கும் உள்ளது. ஆனால் அது நடத்தப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

இது பொதுஜன கட்சியின் ஆட்சி என பலர் கூறினாலும் எமது கட்சியில் உள்ள சிலரே அமைச்சரவையில் உள்ளனர். இது எங்கள் ஆட்சி என பலர் கருதினாலும் பசுவின் முன்பக்கம் மட்டும்தான் எமக்கு, பின்பகுதி மற்றைய தரப்பிடம். இது எமது அரசா என்று எமக்கும் சிலவேளைகளில் சந்தேகம் ஏற்படுகின்றது. வடகிழக்கு, ஊவா, கிழக்கு உட்பட ஐந்து மாகாணங்களில் எமக்கு அமைச்சர் ஒருவர் இல்லை. எனவே, இது எப்படி எமது அரசு எனக் கூறமுடியும்?

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஏனெனில் ஜனாதிபதி தேர்தலை நடத்திவிட்டு பொதுத்தேர்தலுக்கு சென்றால் வெற்றிபெற்ற கட்சிக்கே வாய்ப்பு அதிகம், அதன்மூலம் மக்களின் உண்மையான பிரதிபலன் தென்படாது-என்றார்.

(அ)

# புனர்வாழ்வளிப்பு செயற்பாடுகளிலிருந்து முப்படையினர் முற்றாக அகற்றப்படுவர்!

கொழும்பு, மார்ச் 16



புனர்வாழ்வளிக்கும் செயற்பாடுகளிலிருந்து முப்படையினரை முற்றாக அகற்றி, அவர்களுக்கு பதிலாக இத்துறையில் நிபுணத்துவம் பெற்றவர்களை இணைத்துக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு மட்டக்களப்பு, மாந்தீவில் புனர்வாழ்வளிப்பு நிலையங்களை அமைக்க திட்டமிட்டுள்ளதாக நீதிமன்ற மற்றும் சிறைச்சாலை அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன தெரிவித்தார்.

இவ்வருடத்துக்குள் வீட்டுக் காவல் முறைமையை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக சிறைச்சாலைகளில் காணப்படும் நெருக்கடிகளைக் குறைத்துக் கொள்வதற்கும், அரசாங்கத்தின் செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன குறிப்பிட்டார்.

கந்தக்காடு மற்றும் சேனபுர புனர்வாழ்வளிப்பு நிலையங்களில் முப்படையினரே சேவையிலும், கடமைகளிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவற்றிலிருந்து இதுவரையில் சுமார் 8000 இற்கும் மேற்பட்டோருக்கு புனர்வாழ்வளிக்கப்பட்டு அவர்கள் சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர். இங்கு வருபவர்கள் சாதாரண மனிதர்களை விட குணாதிசயத்தில் முற்றிலும் மாறுபட்டவர்களாகவே இருப்பர்.

ஆனால் ஏதேனுமொரு இடத்தில் இழைக்கப்படும் தவறுக்காக முழு கட்டமைப்பிற்கும் அவப்பெயர் ஏற்படுகிறது. எனவே படிப்படியாக இந்த சேவைகளிலிருந்து முப்படையினரை அகற்றி, அவர்களுக்கு பதிலாக இந்த துறையில் நிபுணத்துவம் பெற்றவர்களை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது-என்றார்.

(அ)

# புகையிலைப் பாவனையால் தினசரி 50 மரணங்கள் பதிவு!

கொழும்பு, மார்ச் 16

நாட்டில் புகையிலை பாவனை காரணமாக தினசரி 50 மரணங்கள் பதிவாவதாக மதுசாரம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலைய நிறைவேற்றுப் பணிப்பாளர் சம்பத் டி சேரம் தெரிவித்தார்.

உலக சுகாதார அமைப்பின் அறிக்கையை சுட்டிக்காட்டியே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் பதிவாகும் மரணங்களில் 83 சத வீதமானவை தொற்றா நோய் காரணமாக ஏற்படுபவை. தொற்றா நோய்கள் ஏற்படுவதற்கான 4 காரணங்களில் புகையிலை பாவனை பிரதான காரணமாக காணப்படுகிறது.

இலங்கையர்கள் புகைப்பிடிப்பதற்காக மாத்திரம் தினசரி 520 மில்லியன் ரூபா செலவிடப்படுகிறது.

நாட்டில் சிகரெட் பாவனையாளர்களின் எண்ணிக்கை 9.1 சதவீதமாக குறைந்துள்ள நிலையில் நாட்டில் உள்ள சிகரெட் பாவனையாளர்களின் மொத்த எண்ணிக்கை 1.5 மில்லியன் ஆகும்.

இந்நிலையை கட்டுப்படுத்தும் நடவடிக்கை தொடர்பில் பல்வேறு முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டும் அவை இதுவரை நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்-என்றார்.

(அ)

# சிறைக் கைதிகள் பங்களிப்பால் 116 மில்லியன் ரூபா வருமானம்

## இராஜாங்க அமைச்சர் அனுராத தகவல்



கொழும்பு, மார்ச் 16

2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் 107 புதிய சட்டமூலங்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடிந்ததாக நீதி மற்றும் சிறைச்சாலை விவகார இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன தெரிவித்தார்.

2023 ஆம் ஆண்டில் கைதிகளின் உழைப்புடன் விவசாயம் மற்றும் கைத்தொழில் துறை மூலம் 116 மில்லியன் ரூபா வருமானத்தைப் பெற முடிந்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2022ஆம் ஆண்டு 29 புதிய சட்டமூலங்களையும், 2023ஆம் ஆண்டு 78 புதிய சட்டமூலங்களையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடிந்தது. அதன்படி, 107 சட்டமூலங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. நீதி அமைச்சின் வரலாற்றில் இக்காலப்பகுதியிலே அதிக எண்ணிக்கையிலான சட்டமூலங்கள் திருத்தப்பட்டுள்ளன.

மேலும், சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளை நாட்டுக்குப் பயனுள்ள குழுவாக மாற்ற முடிந்தது. அரசு மற்றும் தனியார் துறையினரின் பங்களிப்புடன், சிறைச்சாலைகளுக்குள்ளேயே கைதிகள் தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டனர். இதன்படி வெலிக்கடை, மஹர மற்றும் அகுனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலைகளில் இந்தத் திட்டங்கள் நடைமுறைப்படுத் தப்படுகின்றன. இதன் மூலம் பாதணிகள், நுளம்புச் சுருள்கள் உள்ளிட்ட பல பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன.

மேலும், வீட்டுக் காவலில் வைப்பதன் மூலம் தண்டனைக் காலத்தை நிறைவு செய்வதற்கான வாய்ப்பு தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதற்காக உயர் நீதிமன்ற நீதியரசர் யசந்த கோதாகொட தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை எமக்கு கிடைத்துள்ளது. நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ அதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுள்ளார். இது தற்போது சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த வருடத்தினுள் அதனைச் சட்டமாக்க முடியும் என நம்புகிறோம். இதன் ஊடாக சிறைச்சாலைகளில் காணப்படும் நெரிசல் மற்றும் உணவுப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்பதைக் குறிப்பிடவேண்டும்.

சிறைக் கைதிகளுக்காக வருடத்திற்கு 04 பில்லியன் ரூபா செலவிட வேண்டியுள்ளது. 12,000 கைதிகள் இருக்க வேண்டிய சிறைகளில் தற்போது 30,793 கைதிகள் உள்ளனர். இப்பிரச்னைக்குத் தீர்வுகாண, பிணைச் சட்டம் போன்ற பல சட்டங்களில் திருத்தம் செய்யப்பட உள்ளன.

மேலும், 2023 ஆம் ஆண்டில், விவசாயம் மற்றும் கைத்தொழில் துறைகளின் கைதிகளின் பங்களிப்பின் மூலம் 116 மில்லியன் ரூபாவை சம்பாதிக்க முடிந்தது. 2024 ஆம் ஆண்டில் 92,572,967 ரூபா லாபம் எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், போதைக்கு அடிமையாகி சிறையில் இருக்கும் கைதிகளுக்கு முறையான மறுவாழ்வு வழங்கவும் திறன் அபிவிருத்தி வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது-என்றார். (அ)

# நாடளாவிய ரீதியில் 996 பேர் கைது!

கொழும்பு, மார்ச் 16

நாடளாவிய ரீதியில் நேற்று கடந்த 24 மணித்தியாலங்களில் பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 996 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடைய 940 சந்தேகநபர்கள் மற்றும் குற்றப் பிரிவுக்கு குறிப்பிடப்பட்ட பட்டியலில் இருந்த 56 சந்தேக நபர்கள் என மொத்தம் 996 சந்தேகநபர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை குறித்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, 301 கிராம் 434 மில்லி கிராம் ஹெராயின்,500 கிராம் ஐஸ் 296 மி.கி, கஞ்சா 13 கிலோ 963 கிராம், 2,806 கஞ்சா செடிகள், மாவா 2 கிலோ 347 கிராம், 3,216 மாத்திரைகள், துல் 16 கிராம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்டு 26 வயது பெண்ணொருவர் கொலை!

கொழும்பு, மார்ச் 16

சீதுவை பகுதியில் 26 வயதுடைய பெண் ஒருவர் கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் விடுதி ஒன்றின் அறைக்குள் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் பலுகொல்லாகம - மெகொடவெவ பகுதியில் வசிக்கும் 26 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

தகாத உறவில் ஈடுபட்ட ஆண் ஒருவருடன் ஏற்பட்ட தகராறு காரணமாக குறித்த பெண் கொலை செய்யப்பட்டுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தநிலையில் குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சீதுவை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

(அ)

# வெளிநாட்டு சக்திகளின் கைப்பாவையாக அரசு!

## சாடுகின்றார் ரொஷான் ரணசிங்க

கொழும்பு, மார்ச் 16

நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்பதாகக் கூறிக்கொண்டு இந்த அரசாங்கம் வெளிநாட்டு சக்திகளின் கைப்பொம்மையாகியுள்ளதாக விளையாட்டுத்துறை முன்னாள் அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டை பாதுகாப்பதற்காகவும் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்காகவே அனைத்து வழிகளிலும் நாம் ஒத்துழைப்பு வழங்கினோம். எதிர்வரும் காலங்களிலும் அவ்வாறே செயற்படுவோம். இந்த நாட்டின் பிரஜைகள் என்ற ரீதியில் நாம் யாருக்கும் அடிமைகளாக செயற்படவேண்டிய தேவை கிடையாது.

நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்பதாக கூறிக்கொண்டு இந்த அரசாங்கம் வெளிநாட்டு சக்திகளின் கைப்பொம்மையாகியுள்ளது. இது மிகவும் தவறானது. நாட்டின் இறைமையை பாதுகாக்கக்கூடிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

ஊழலை ஒழித்து நாட்டை கட்டியெழுப்புவது எமது கூட்டணியின் கொள்கையாகும். இந்த நாட்டின் ஊழல்களை 24 மணிநேரத்துக்குள் முடிவுக்கு கொண்டுவந்து 25 ஆவது மணித்தியாலத்தில் இருந்து ஊழலற்ற புதிய பயணத்தை ஆரம்பிக்க முடியும்-என்றார். (அ)

## வாள்வெட்டு...

கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் நகரம், கொக்குவில், குருநகர், வண்ணார்பண்ணையை சேர்ந்த இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். இவர்கள் 19 முதல் 26 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர்.

விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்ட இவர்கள் சட்ட நடவடிக்கைகாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் சான்றுப் பொருட்களுடன் ஒப்படைக்கப்பட்டனர். (ஐ)

## வடக்கு...

குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு நாம் விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளோம்.

இந்நிலையில், இங்குள்ள மக்களுடன் கலந்துரையாடியதன் பிரகாரம் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளதால் தாம் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருவதாக தெரிவித்தனர்.

இளைஞர் - யுவதிகள் வேலை வாய்ப்பு இன்றி பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதையும் வெளிப்படுத்தினர்.

இவ்வாறான விடயங்களை நாம் ஏற்கனவே அறிந்துள்ளோம். அதற்கேற்ப பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றோம்-என்றார். (அ)

## வெடுக்குநாறி...

நெடுங்கேணி பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டனர்.

இதன்போது பொலிஸ் உயர் அதிகாரிகள் வருகை தந்து ஆர்ப்பாட்டக்காரருடன் பேச முற்பட்டபோதும், அதற்கு மறுப்பு தெரிவித்து பொலிஸாருக்கு எதிரான கோசங்களை ஆர்ப்பாட்டக்கரரர்கள் எழுப்பினர்.

இதன்போது அப் பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டதுடன், பொலிஸ் நிலையத்தில் விசேட அதிரடிப்படையின் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

பொலிஸ் நிலையம் முன்பாக சுமார் அரை மணிநேரம் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்ட மக்கள் பின்னர் அங்கிருந்து சென்று பஸ் நிலையத்தில் கண்டன ஆர்ப்பாட்டத்தை நிறைவு செய்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ‘ பொலிஸ் அராஜகம் ஒழிக, வெடுக்குநாறி எங்கள் சொத்து, கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய், வழிபாட்டு உரிமையை தடுக்காதே, சிவ வழிபாட்டை தடை செய்யாதே, வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம், பொய் வழக்கு போடாதே, பௌத்தமயமாக்கலை உடனே நிறுத்து” என எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியிருந்ததுடன் கோசங்களையும் எழுப்பினர்.

வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலய நிர்வாகத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட இக்கண்டன ஆர்ப்பாட்டப் பேரணியில் தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான சி.சிறிதரன், இ.சாள்ஸ் நிர்மலநாதன், ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறப்பினர் வினோதரராதலிங்கம், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சி இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் வேலன் சுவாமிகள், கிறிஸ்தவ மதகுருமார், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்களான செந்தில்நாதன் மயூரன், ஜி.ரி.லிங்கநாதன், ம.தியாகராஜா, து.ரவிகரன், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பொது மக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (அ)

## யாழ்.இந்து...

இந்துக்களின் போர் என்று அழைக்கப்படும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, கொழும்பு இந்துக் கல்லூரி அணிகளின் 13ஆவது பெருந்துடுப்பாட்டப் போட்டி நேற்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வென்ற கொழும்பு இந்துக் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி, களமிறங்கிய அந்த அணிக்கு சிறீ நிதுஷன், தி. யாதவ் ஆகியோர் தொடக்கம் கொடுத்தனர்.

இருவரும் நிதானமாக ஆடினர். 11ஆவது ஓவரில் நிதுஷன் 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த தாருண்யன் நிதானம் காட்டினார். இந்த நிலையில், யாதவ் 8 ஓட்டங்களுடன் (45 பந்துகளில்) ஆட்டமிழந்தார். அடுத்து வந்த மிதுஷிகன் ஓட்டம் எதனையும் பெறாமல் ஆட்டமிழக்கவே, 22 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்கள் எனத் தடுமாறியது கொழும்பு இந்துக் கல்லூரி.

பின்னர் வந்த வீரர்கள் தடுப்பாட்ட முறைமையை கடைப்பிடித்தனர். ஆனாலும் யாழ். இந்துவின் பந்துவீச்சாளர்கள் அவர்களை நிலைக்க விடவில்லை. 55.1 ஓவர்கள் தாக்குப் பிடித்த கொழும்பு இந்துக் கல்லூரி 80 ஓட்டங்களையே பெற்றது.

பின்னர் வந்த வீரர்களில் அபிஷேக் பெற்ற 14 ஓட்டங்களே கொழும்பு இந்துக் கல்லூரி வீரர் ஒருவர் பெற்ற அதிகூடிய ஓட்டமாக அமைந்தது. டிலோஜன் 11, யசூர்யன் 5 ஓட்டங்களைப் பெற்றனர்.

யாழ். இந்துக் கல்லூரியின் பந்துவீச்சில் சுபர்ணன், ஹரிகரன் ஆகியோர் தலா 3 விக்கெட்களையும் சாருஜன் 2, தரணீசன், பரத்துவாசன் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வீரர்கள் கொழும்பு இந்துக் கல்லூரியின் பந்துவீச்சை அநாயசமாக எதிர்கொண்டனர்.

தொடக்கம் கொடுத்த பரிஷித், பவனன் ஆகியோர் வலுவான ஆரம்பத்தை அணிக்கு இட்டுக் கொடுத்தனர். பரிஷித் அதிரடியாக ஆடி ஓட்டங்களை குவிக்க, பவனன் நிதானமாக ஆடி பரிஷித்துக்கு ஒத்துழைப்புக் கொடுத்தார்.

பரிஷித் 60 பந்துகளை எதிர்கொண்டு 9 பௌண்ட்ரிகளுடன் 46 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். அடுத்து வந்த பிரியந்தன் பவனனுடன் இணைந்து நிதானம் காட்டினார். அணி 91 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது 60 பந்துகளில் 3 பௌண்ட்ரிகளுடன் 26 ஓட்டங்களைப் பெற்றிருந்த பவனன் ஆட்டமிழந்தார்.

பிரியந்தனுடன் இணைந்த பிரிமிகன் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இதனால், முதல்நாளான நேற்றைய நாள் ஆட்டம் முடிவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 42 ஓவர்களில் 4 விக்கெட்களை மாத்திரம் இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

பிரிமிகன் 5 பௌண்ட்ரிகளுடன் 38 ஓட்டங்களையும் தரணீசன் 5 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

கொழும்பு இந்துக் கல்லூரியின் சார்பில் பந்துவீசிய அபிஷேக் 2 விக்கெட்களையும் சிறீ நிதுஷன், தேஷ்கர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இன்று போட்டியின் இரண்டாம் மற்றும் இறுதிநாள் ஆட்டமாகும். (ஐ)

## கண்டித்து...

நேற்று அவர்கள் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கிராமிய அமைப்புகளின் தலைவர் செல்லத்துரை நற்குணம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

எமது யாழ்ப்பாண மாவட்ட கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்ச்சியாக அதிகரித்து வருகிறது. இந்திய மீனவர்கள் எமது வாழ்வாதாரத்தையும் தொழிலையும் தொடர்ச்சியாக அழித்துவரும் நிலையில் இலங்கை அரசாங்கத்திடமும் இந்திய அரசாங்கத்திடமும் எமது ஆதங்கங்களை வெளிப்படுத்தியும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

அண்மையில் இந்திய சட்டவிரோத மீன்பிடியாளர்களைக் கட்டுப்படுத்துமாறு கோரி இலங்கை கடல் எல்லையை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினோம். யாழ்ப்பாண இந்தியத் துணைத் தூதரகத்திடம் கோரிக்கை மனு கையளித்தோம். ஆனால், பயன் ஏதும் ஏற்படவில்லை.

இவ்வாறான நிலையில் எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்துக்கு முன்பாக தொடர்ச்சியான உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட முடிவு செய்துள்ளோம். எமது போராட்டத்துக்கு ஏனைய மாவட்டங்களை சேர்ந்த சங்கங்கள், சமாசங்கள் மற்றும் சம்மேளனங்கள் தமது ஆதரவை வழங்க வேண்டும் - என்றும் அவர் கூறினார்.

## மனித...

உடல்நிலை மோசமடைந்து வருகிறது. அவர்கள் விடயத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழு தலையிட வேண்டும் என்று கோரியே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

தமது உறவுகளின் உடல்நிலை மோசமடைவதால் அவர்கள் விடயத்தில் கரிசனை கொள்ளுமாறு கோரி கைதிகளின் உறவுகள் முன்னதாக, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பணிமனைக்கு சென்றனர். அங்கு, நிறைவேற்று அதிகாரிகள் இல்லாதநிலையில், அங்கிருந்தவர்களும் முறைப்பாடு செய்யச் சென்றவர்களுடன் உரையாட வில்லை. இதைத் தொடர்ந்தே அவர்கள் முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தைத் தொடர்ந்து அங்கு வந்த உயர் அதிகாரிகள் நாளை (இன்று) சிறைச்சாலைக்கு சென்று கைதிகளை பார்வையிட்டு அவர்களின் விடயத்தில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதியளித்தனர்.

இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரும் பங்கேற்றிருந்தனர். (ஐ-04)

## வட்டு...

இந்த கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய நால்வர் கடந்த 12 ஆம் திகதி கைது செய்யப்பட்ட நிலையில், மற்றுமொருவர் அதற்கடுத்த நாள் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர்கள் ஐவரும் வட்டுக் கோட்டை பகுதியைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு தரப்பினருக்கு இடையிலான தனிப்பட்ட தகராறு காரணமாக கொலை இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் கூறினர்.

இந்த நிலையில், சந்தேகநபர்கள் மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (அ)

## நல்லூரில்...

முகமாக இன்று காலை 07.30 மணிக்கு நல்லூர் ஆலய முன்றலில் இருந்து வவுனியாவுக்கு வாகன பேரணியாக செல்ல திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கைது செய்யப்பட்டவர்கள் ஒரு குற்றமும் செய்யாதவர்கள். இவர்கள் செய்த பெரிய குற்றம் வெடுக்குநாறி மலைக்கு போனதுதான். “ஓம் நமச்சிவாய” என கூறி, பூசை செய்வதற்காகவே அவர்கள் அங்கு சென்றார்களே தவிர வேறெதற்காகவும் இல்லை.

இதனால், இவர்கள் தொல்லியல் சட்டத்தை மீறியதாக அவர்களை கைது செய்து விளக்கமறியலில் வைத்துள்ளனர்.

இதை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம். இந்த சம்பவத்தை நாம் கண்டு கொள்ளவில்லை என்றால், நாளை வடக்கு - கிழக்கு எங்கும் தொல்லியல் சட்டம் என கூறி அனைத்து பிரதேசங்களையும் ஆக்கிரமிக்ககூடும் ஆகவே அனைவரையும் குறித்த பேரணியில் கலந்துகொள்ள வருமாறு பகிரங்க அழைப்பு விடுக்கிறோம் - என்றார். (அ)

## பொருளாதாரத்தை...

டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மதிய உணவு வழங்கப்படும் பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கையை பதினொரு இலட்சத்திலிருந்து இருபது இலட்சமாக அதிகரிப்பதற்கு விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் இரண்டு அமைச்சரவைப் பத்திரங்களை முன்வைத்த போதிலும் நிதியமைச்சு பார்வையற்ற நோயாளியைப் போன்று செயற்படுகிறது.

கடந்த திங்கட்கிழமை நிதியமைச்சு மசாலாப் பொருட்களின் மீள் ஏற்றுமதியை அனுமதிப்பதற்கான வர்த்தமானியை வெளியிட்டது. இதன் பின்னணியில் சதி உள்ளது. மிளகு, இலவங்கப்பட்டை, மஞ்சள், இஞ்சி, சாதிக்காய் போன்ற மசாலாப் பொருட்களில் இலங்கை முன்னணியில் உள்ளது.

எங்களது தேநீருக்கு செய்தது போலவே வெளிநாட்டில் இருந்து தரம் குறைந்த மசாலாக்கள் கொண்டு வந்து அதனை இலங்கைப் பொருட்களுடன் கலந்து இலங்கை தயாரிப்பாக மீள் ஏற்றுமதி செய்வதே நோக்கமாகும் - என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# வட்டு. இளைஞர் கொலை குறித்து கடற்படையினரிடம் விசாரணை!

## கடற்படைப் பேச்சாளர் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 16

**யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை, பொன்னாலை கடற்படை முகாமுக்கு அரு காமையில், அண்மையில் தம்பதியர் கடத்திச் செல்லப்பட்ட சம்பவத்தின் போது, கடற்படையினர் நடந்துகொண்ட விதம் குறித்து விரிவான விசாரணைகளை மேற்கொள்ளவுள்ள தாக கடற்படையின் ஊடகப் பேச்சாளர் கப்டன் கயான் விக்ரம சூரிய தெரிவித்துள்ளார்.**

வட்டுக்கோட்டை இளைஞனின் மரணத்துடன் கடற்படையினருக்கும் தொடர்பு இருப்பதாகக் கொலைசெய்யப்பட்டவரின் மனைவி குற்றம் சுமத்தியிருந்த நிலையில் கடற்படையினரின் முன்னிலையில் இளைஞன் தாக்கப் பட்டு கடத்தப்படுகின்ற சி.சி.ரி.வி காணொளிக் காட்சிகள் வெளியாகி யிருந்தன.

வெளியாகியுள்ள வீடியோ காட்சியில் பல அதிர்ச்சி தரும் விடயங்கள் பதிவாகியுள்ளன. இந்நிலையில் கடற்படையின் ஊடகப் பேச்சாளர் இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ளார்.

இந்த சம்பவத்தின்போது கடற்படையினர் ஏதேனும் தவறு செய்திருந்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் கூறியுள்ளார்.

கடந்த மார்ச் 11 ஆம் திகதி, யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பொன்னாலை கடற்படை முகாமுக்கு அருகில் ஒரு தம்பதியினர் கொடூரமாகத் தாக்கி கடத்திச் செல்லப்பட்ட நிலையில், கணவர் வெட்டிக் கொல்லப்பட்டார். இதன்போது குறித்த தம்பதியினர் பாதுகாப்பு தேடி கடற்படை முகாமுக்குள் சென்றவேளை அவர்களை கடற்படையினர் விரட்டியடித்துள்ளனர்.

அத்துடன் வன்முறைக்குழுவினரால் இளைஞர் கடத்தப்படும் போது கடற்படையினர் அதனை தடுக்கவில்லை என்றும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (அ)

# டிப்பர் மீது பொலிஸ் சூடு!

முல்லைத்தீவு, மார்ச் 16

முல்லைத்தீவில் டிப்பர் வாகனம் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவில் நேற்றுமுன்தினம் பொலிஸாரும், விசேட அதிரடிப்படையினரும் இணைந்து விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இந்நிலையில், முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான், கற்சிலைமடுப் பகுதியில் சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது அவ் வீதியால் பயணித்த சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகன மொன்றை பொலிஸார் வழிமறித்தனர்.

எனினும், பொலிஸாரின் கட்டளையையும் மீறி குறித்த டிப்பர் வாகனம் செல்லத் தொடங்கிய நிலையில் டிப்பர் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தி, வாகனத்தை நிறுத்தியதுடன் வாகனச் சாரதியையும் கைது செய்தனர் என தெரிவிக்கப்பட்டது. (அ)

# இந்திய மீனவர்கள் 15 பேர் காரைநகர் கடலில் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 16

நாகபட்டினம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து மீன் பிடிக்கச் சென்று காரைநகர் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த 15 மீனவர்கள் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

எல்லை தாண்டி மீன்பிடித்ததற்காக ஒரு விசைப் படகுடன்15 மீனவர்களை கைது செய்த கடற்படையினர், காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்று விசாரணை மேற்கொண்டனர்.

பின்னர் கைது செய்யப்பட்ட மீனவர்கள் மயிலட்டி மீன்பிடித் துறைமுகத்தில் வைத்து யாழ்ப்பாணம் மீன்வளத்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கெஹலிய மனு தாக்கல்

கொழும்பு, மார்ச் 16

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கொழும்பு மேல் நீதிமன்றில் மனு தாக்கல் செய்துள்ளார்.

தமக்கு பிணை வழங்குமாறு கோரியே அவர் குறித்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

குறித்த மனு எதிர்வரும் திங்கட்கிழமை ஆராயப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# எக்ஸ்-பிரஸ் பேர்ள் விவகாரம்:
# காப்பீட்டு முகவர்களின் மனுவை நிராகரித்தது சிங்கப்பூர் நீதிமன்று

கொழும்பு, மார்ச் 16

எக்ஸ்-பிரஸ் பேர்ள் கப்பலினால் நாட்டிற்கு ஏற்பட்ட பாதிப்பிற்கு இழப்பீடு கோரி அரசாங்கத்தினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை தள்ளுபடி செய்யுமாறு கப்பல் நிறுவனத்தின் காப்பீட்டு முகவர்கள் முன்வைத்த மனுவை, சிங்கப்பூர் சர்வதேச வர்த்தக நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

எக்ஸ் - பிரஸ் பேர்ல் கப்பலில் ஏற்பட்ட தீப்பரவல் மற்றும் கப்பல் இலங்கை கடற்பரப்பிற்குள் மூழ்கியதால், இலங்கையின் கடல்சார் சுற்றுச்சூழல் ஏற்பட்ட பாதிப்பிற்கு இழப்பீடு வழங்குவதற்கு ஏற்கனவே பிரிட்டன் நீதிமன்றம் கால அவகாசம் வழங்கியிருந்தது.

இதன் காரணமாக குறித்த வழக்கை தள்ளுபடி செய்யுமாறு கப்பல் நிறுவனத்தின் காப்பீட்டு முகவர்கள் சிங்கப்பூர் நீதிமன்றத்தில் கோரியதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்தக் கோரிக்கையை நிராகரித்த நீதிமன்றம் ஆட்சேபனைகளை தாக்கல் செய்வதற்கு காப்பீட்டு நிறுவனங்களுக்கு உத்தரவிட்டதுடன், எதிர்வரும் 24ஆம் திகதி வரை மீண்டும் கப்பல் நிறுவனத்திற்கு அவகாசம் வழங்கியுள்ளது.

இதன்படி, இந்த வழக்கு எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. இதனிடையே, எக்ஸ்-பிரஸ் பேர்ல் கப்பல் தீக்கிரையானதன் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகளுக்கு இழப்பீடு வழங்குவதற்காக விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கு எதிராக சட்டமா அதிபரினால் பிரித்தானிய உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபனை மனுக்களுக்கு எதிரான மனுக்களை தாக்கல் செய்ய கப்பல்நிறுவனத்தின் காப்பீட்டு முகவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதன்படி, குறித்த காப்பீட்டு முகவர்களுக்கு எதிர்வரும் மே மாதம் 24 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதேநேரம், கப்பல் நிறுவனத்திடமிருந்து அரசாங்கம் பெறக்கூடிய இழப்பீட்டுத் தொகையை 19.5 மில்லியன் ஸ்ரேலிங் பவுணாக வரையறுத்து பிரித்தானிய உயர் நீதிமன்றம் உத்தரவும் பிறப்பித்துள்ளது. இந்த உத்தரவிற்கு எதிராக இலங்கை அரசாங்கம் கடந்த ஜனவரி மாதம் 29 ஆம் திகதி ஆட்சேபனைகளை தாக்கல் செய்திருந்த நிலையில் கப்பல் நிறுவனத்தின் காப்பீட்டு முகவர்கள் முன்வைத்த மனுவை, சிங்கப்பூர் சர்வதேச வர்த்தக நீதிமன்றம் நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தது. (அ)

# காட்டு யானை மிதித்து இளம் தாயார் மரணம்!

மன்னார், மார்ச் 16

மன்னார், மடு பொலிஸ் பிரிவில் வாழ்வாதாரத்துக்காகத் தொழில் செய்யவந்த இளம் குடும்ப பெண்ணொருவர், யானை மிதித்து உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றுள்ளது.

வவுனியாவில் வசித்து வந்த குடும்பம் ஒன்று கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பு மன்னார், மடு பொலிஸ் பிரிவிலுள்ள கட்டையடம்பன் பகுதிக்குத் தொழில் நிமித்தம் வந்துள்ளனர்.

இவர்கள் தங்கள் நண்பன் ஒருவரின் காணியில் தோட்டம் செய்து வந்துள்ளனர்.

சம்பவம் அன்று இரவு வீட்டின் வளவுக்குள் சத்தம் கேட்டதும் இவர்கள் எழும்பிப் பார்த்தபோது யானை ஒன்று வளவுக்குள் நின்றதைக் கவனித்துள்ளனர்.

அந்த யானை யன்னல் அருகே வந்துள்ளது. இவர்கள் ஒரு குழந்தையுடன் இருந்தமையால் வீட்டை விட்டு வெளியேற முற்பட்டுள்ளனர்.

இவர்கள் இருட்டான பாதையால் குடும்பமாக வெளி யேறியுள்ளனர். அப்போது மரணித்த குடும்பப் பெண்ணான கே.டபிள்யூ. ஆராச்சி வியன்சேலாக்கே கயனி மதுவயந்தி குமாரி (வயது 29) பாதையில் தவறி வீழ்ந்த தும் இருட்டுக்குள் நின்ற யானை அவரின் மேல் மிதித்தே மரணம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரண விசாரணையை அதிகாரி ஏ.ஆர்.நசீர் மேற்கொண்டார். (அ)

# கனடாவில் ஹரி ஆனந்தசங்கரியை தேடும் சுவரொட்டிகளால் பரபரப்பு!

மொன்றியல், மார்ச் 16

கனடாவின் பூர்வீகக் குடிகள் தொடர்பான அமைச்சரும், தற்போது ஆட்சியிலிருக்கும் லிபரல் கட்சியின் ஸ்காபரோ - ரூஜ் பாராளுமன்ற உறுப்பினருமான ஹரி ஆனந்தசங்கரியைக் காண வில்லையென்று அந்த தேர்தல் தொகுதி பலஸ்தீன மக்கள் சுவரொட்டிகளை ஒட்டியிருக்கின்றார்கள்.

தற்போது காசாவில் பலஸ்தீன மக்களுக்கு எதிராக இஸ்ரேல் புரியும் இனப்படுகொலை சம்பந்தமாகவே அவர்கள் அவரைத் தேடிக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்த விவகாரத்தில் ஹரி ஆனந்தசங்கரி மௌனமாக இருப்பதால் அங்குள்ள பலஸ்தீனியர்களும், கணிசமான தமிழ் மக்களும் அதிருப்தியடைந்துள்ளனர்.

இந்த நிலைமையிலேயே சர்ச்சைக்குரிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. (அ)




# 2 வருடங்களில் வெளிநாடுகளுக்குச் சென்ற மின்சார சபையின் 159 பொறியியலாளர்கள்!

கொழும்பு, மார்ச் 16

இலங்கை மின்சார சபையில் பணிபுரிந்த 159 பொறியியலாளர்கள் இரண்டு வருடங்களுக்குள் வெளிநாடு சென்றுள்ளதாகவும் 105 பொறியியலாளர்கள் தமது சேவையை விட்டு விலகியுள்ளதுடன் மேலும் 54 பேர் உத்தியோக பூர்வ விடுமுறை பெற்றுச் சென்றுள்ளதாகவும் இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர்கள் சங்கத்தின் தலைவர் தனுஷ்க பராக்கிரமசிங்க தெரிவித்தார்.

பொறியியலாளர் பிரிவில் பணி புரிந்து மிகவும் சிக்கலான கடமைகளில் ஈடுபட்ட அனுபவம் வாய்ந்த பொறியியலாளர்கள் தமது பணியை மேலும் துறந்தால் இலங்கை மின்சார சபை கடும் நெருக்கடிக்கு உள்ளாகும் நிலை ஏற்படும் எனவும் அவர் கூறினார்.

விடுமுறை பெற்று வெளிநாடுகளில் தொழில் புரியும் அதிக எண்ணிக்கையான பொறியாளர்கள் மீண்டும் பணிக்கு திரும்புவார்கள் என்ற நம்பிக்கை இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.03.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## கான்காகேப் கிண்ண உதைபந்து

# மெஸ்ஸியின் இன்ரர் மியாமி காலிறுதிக்கு முன்னேறியது!



புளோரிடா, மார்ச், 16

கான்காகேப் வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் மெஸ்ஸியின் இன்ரர் மியாமி அணி காலிறுதிக்கு முன்னேறியது.

வட அமெரிக்கா, மத்திய அமெரிக்கா மற்றும் கரீபியன் தீவுகளைச் சேர்ந்த கழக அணிகளுக்கு இடையேயான கான்காகேப் சம்பியன்ஸ் கிண்ண உதைபந்தாட்டத் தொடர் அமெரிக்காவில் நடை பெற்று வருகிறது.

இதில், நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் நாஷ்வில்லே மற்றும் இன்ரர் மியாமி அணிகள் மோதின.

இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய மெஸ்ஸியின் இன்ரர் மியாமி அணி 3-1 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்று காலிறுதிக்கு தகுதி பெற்றது.

இந்த போட்டியில் இன்ரர் மியாமி தரப் பில் சுவாரஸ், மெஸ்ஸி மற்றும் ரெய்லர் ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர். அதேவேளையில் நாஷ்வில்லே அணி சார்பில் சாம் சுர்ரிஜ் மட்டுமே ஒரு கோல் அடித்தார். இன்ரர் மியாமி காலிறுதி ஆட்டத்தில் மான்டேரி அணியுடன் மோதவுள்ளது. (ஐ)



# இந்தியன்வெல்ஸ் ரென்னிஸ் மெத்வதேவ் அரையிறுதியில்

கலிபோர்னியா, மார்ச் 16

இந்தியன்வெல்ஸ் ஓப்பன் ரென்னிஸ் தொடரில் டானியல் மெத்வதேவ் அரையிறுதிக்கு முன்னேறினார்.

இந்தியன்வெல்ஸ் ஓப்பன் சர்வதேச ரென்னிஸ் போட்டி அமெரிக்காவில் நடந்து வருகிறது. இந்தத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் காலிறுதி போட்டி ஒன்றில் முன்னணி வீரரான ரஷ்யாவை சேர்ந்த டேனியல் மெத்வதேவ் டென்மார்க்கின் ஹோல்கர் ரூனேவை எதிர்கொண்டார்.

இந்த ஆட்டத்தில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய மெத்வதேவ் 7-5, 6-4 என்ற செற் கணக்கில் டென்மார்க்கின் ஹோல்கர் ரூனேவை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார். (ஐ)

# டில்லி கப்பிட்டல்ஸ் அணியின் முன்னணி வீரர்கள் விலகல்!



புதுடில்லி, மார்ச் 16

டில்லி கப்பிட்டல்ஸ் அணியின் ஹாரி ப்ரூக், லுங்கி நிகிடி ஆகிய முன்னணி வீரர்கள் அந்த அணியிலிருந்து விலகியுள்ளனர். இது அந்த அணிக்கு பின்னடைவாகப் பார்க்கப்படுகின்றது.

ஐ. பி. எல். கிரிக்கெட்டின் 17ஆவது தொடர் எதிர் வரும் 22ஆம் திகதி ஆரம்பமாகிறது.

இந்த நிலையில், டில்லி கப்பிட்டல்ஸ் அணியால் 4 கோடி (இந்திய) ரூபாய்க்கு வாங்கப்பட்ட இங்கிலாந்து இளம் வீரர் ஹாரி புரூக் தனிப்பட்ட காரணங்களுக்காக தொடரிலிருந்து விலகியுள்ளார். இதேபோன்று, அந்த அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான தென்னாபிரிக்காவை சேர்ந்த லுங்கி நிகிடி காயம் காரணமாக விலகியுள்ளார்.

இவர்கள் இருவரின் விலகலும் அந்த அணிக்குப் பின்னடைவாகப் பார்க்கப்படுகின்றது. லுங்கி நிகிடிக்கு பதிலாக அவுஸ்திரேலியாவின் சகலதுறை வீரர் ஜேக் ப்ரேசர்-மெக்குர்க் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

## இந்தியன்வெல்ஸ் ரென்னிஸ்

# இகா ஸ்வியாரெக், கோகோ காப் அரையிறுதிக்கு முன்னேறினர்!





கலிபோர்னியா, மார்ச் 16

இந்தியன்வெல்ஸ் ஓப்பன் ரென்னிஸ் தொடரில் ஸ்வியாரெக், கோகோ காப் ஆகியோர் அரையிறுதிக்கு முன்னேறினர்.

இந்தியன்வெல்ஸ் ஓப்பன் சர்வதேச ரென்னிஸ் போட்டி அமெரிக்காவில் நடந்து வருகிறது. இந்தத் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவின் காலிறுதி ஆட்டங்கள் நேற்று நடந்தன.

இதில், போலந்து வீராங்கனை இகா ஸ்வியாரெக் டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி ஆகியோர் மோதினர்.

இதில் முதல் செற்றை 6-4 என இகா ஸ்வியாடெக் கைப்பற்றினார். இதையடுத்து நடைபெற்ற 2ஆவது செற்றில் 1-0 என ஸ்வியாரெக் முன்னிலையில் இருந்த போது காயம் காரணமாக கரோலின் வோஸ்னியாக்கி வெளியேறினார். இதன் மூலம் ஸ்வியாரெக் அரையிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு காலிறுதி ஆட்டத்தில் அமெரிக்காவின் கோகோ காப் சீனாவின் யுவான் யு உடன் மோதினார். விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் கோகோ காப் 6-4, 6-3 என்ற செற்கணக்கில் யுவான் யுவை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார். (ஐ)

# பாகிஸ்தானின் பயிற்றுநர் பதவி முடிவெடுக்க தடுமாறும் வற்சன்!



கராச்சி, மார்ச் 16

கடந்த ஆண்டு நடந்த 50 ஓவர் உலகக்கிண்ணப் போட்டியில் பாகிஸ்தான் அரையிறுதி வாய்ப்பை இழந்து வெளியேறிய பிறகு பயிற்றுநர், அணித் தலைவர் உள்ளிட்டோர் மாற்றம் செய்யப்பட்டனர். அதன் பிறகு அந்த அணிக்கு நிரந்தர தலைமை பயிற்றுநராக யாரும் நியமிக்கப்படவில்லை.

முகமது ஹபீஸ் தற்காலிக பயிற்றுநராக செயல்பட்டார். இந்த நிலையில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கு புதிய தலைமை பயிற்றுநரை நியமிக்க அந்த நாட்டு கிரிக்கெட் சபை நடவடிக்கை எடுத்தது.

இந்த நிலையில், அவுஸ்திரேலியாவின் சகலதுறை வீரர் ஷேன் வற்சன் பாகிஸ்தானின் தலைமை பயிற்றுநராக நியமிக்கப்படலாம் என்று தகவல் வெளியானது. வற்சன் கேட்ட ஊதியமான இலங்கை மதிப்பில் சுமார் 61 கோடி ரூபாயை வழங்கவும் சம்மதம் தெரிவிக்கப்பட்டது.

எனினும் இது விடயத்தில் வற்சன் தாமதம் காட்டி வருகின்றார். பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நிர்வாகத்தில் அடிக்கடி மாற்றங்கள் நிகழ்வதே அவர் முடிவை தாமதிக்கக் காரணம் என்று கூறப்படுகின்றது.

வற்சன் தற்போது பாகிஸ்தான் சுப்பர் லீக் போட்டிக்கான குயட்டா கிளாடியட்டர்ஸ் அணியின் பயிற்றுநராக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஜேம்ஸ் கிரிகோரி

# காஸா போர்: “மக்களின் பசியை ஆயுதமாக்கும் இஸ்ரேல்” ஐரோப்பிய ஒன்றியம் குற்றச்சாட்டு!

காஸாவில் நிலவும் “பட்டினி” சூழல், போரின் ஆயுதமாகப் பயன்படுத்தப்படுவதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவுக் கொள்கைத் தலைவர் ஜோசப் பொரெல் குற்றம் சாட்டியுள்ளார். காஸா எல்லைகளுக்குள் நிவாரண உதவி கிடைக்கப் பெறாமல் இருக்கும் சூழலை “மனிதனால் உருவாக்கப்பட்ட” ஒரு பேரழிவு என்று அவர் விவரித்துள்ளார்.

மிகவும் அவசியமான உணவுப் பொருட்களை ஏற்றிக்கொண்டு ஸ்பெயின் நாட்டுக் கப்பல் ஒன்று சைப்ரஸில் இருந்து காஸாவுக்கு சென்றுள்ளது. ஆனால் இந்தக் கடல் வழி நிவாரணம், தரை வழியாக நிவாரண உதவிகளை வழங்குவதற்கு மாற்றாக இருக்க முடியாது என்று ஐ.நா குறிப்பிட்டுள்ளது.

இதற்கிடையில் தெற்கு காஸாவில் தாக்குதல் நடத்தப்படும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உறுதியாகத் தெரிவித்துள்ளார்.

போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விரைவாக நிவாரண உதவி வழங்குவதற்கு மிகவும் சிறந்த வழி, சாலை மார்க்கம்தான். ஆனால் இஸ்ரேலிய கட்டுப்பாடுகளால் தேவையான உதவிகளில் ஒரு பகுதியளவு நிவாரணம் மட்டுமே உள்ளே நுழைய முடிவதாக நிவாரணம் வழங்கும் உதவி நிறுவனங்கள் கூறுகின்றன.





### சாலை வழியாகச் செல்வதில் உள்ள தடைகள்

தற்போது சாலை வழி நிவாரணம் வழங்குவதற்கு மாற்றாக கடல் மற்றும் வான் வழிகளில் கவனம் திரும்பியுள்ளது. வடக்கு காஸாவிற்கு உதவ, கடந்த மூன்று வாரங்களில் முதல்முறையாக செவ்வாயன்று ஐ.நா. உலக உணவுத் திட்டத்தின் கீழ் நிவாரணப் பொருட்களுடன் சில டிரக்குகள், தரைவழிப் பாதையைப் பயன்படுத்தின.

காஸாவின் எல்லையையொட்டிய இஸ்ரேலிய ராணுவ சாலையை நிவாரண டிரக்குகள் பயன்படுத்தியதாக, ஆக்கிரமிக்கப்பட்ட பாலத்தீனப் பகுதிக்கான ஐ.நா நிவாரண ஒருங்கிணைப்பாளர் ஜேமி மெக்கோல்ட்ரிக், ராய்ட்டர் செய்தி முகமையிடம் தெரிவித்தார்.

இதன்மூலம் காஸா நகரில் 25,000 பேருக்குப் போதுமான உணவு வழங்கப்பட்டுள்ளது. உலக உணவுத் திட்டத்தின் செய்தித் தொடர்பாளர் ஷாஸா மொக்ராபி குறிப்பிடுகையில், “உணவு விநியோகங்கள் மேலும் அதிகரிக்கப்படும், ஆனால் நிவாரண உதவிகளை சீராக வழங்கப் போதுமான பாதை வசதி வேண்டும்,” என்றார்.

காஸாவில் நிலவும் உணவுப் பற்றாக் குறைக்கு தாங்கள் காரணம் இல்லை என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது. ஏனெனில் தெற்குப் பகுதியில் நிவாரண டிரக்குகள் வந்து போக இரண்டு பாதைகள் திறக்கப்பட்டிருப்பதாக இஸ்ரேல் தரப்பில் கூறப்பட்டுள்ளது. ஆனால் செவ்வாயன்று நியூயார்க்கில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் உரையாற்றிய பொரெல், “காஸா பிராந்தியத்தில் நிலவும் உணவு நெருக்கடிக்கு காரணம், தரை வழிப் பாதை இல்லாததுதான்” எனக் குறிப்பிட்டார்.

“உயிர் வாழவே போராடும் சூழலில் இருக்கும் மக்களைத்தான் நாங்கள் எதிர்கொள்கிறோம். காஸாவுக்குள் மனிதாபிமான அடிப்படையில் நிவாரணங்கள் தேவைப்படுகின்றன, அதைச் சாத்தியமாக்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் முடிந்தவரை போராடுகிறது,” என்றும் அவர் கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர், “மனிதாபிமான நெருக்கடி என்பது மனிதனால் உருவாக்கப்பட்டது, மேலும் கடல் வழி, வான் வழி மூலம் நிவாரணம் வழங்குவதற்கான மாற்று வழிகளைப் பற்றி யோசிக்கும் நாம், தரை மார்க்கமாக நிவாரணம் வழங்குவதற்கான இயற்கையான வழி இருந்தும் செயற்கையாக அவை மூடப்பட்டிருப்பதை நினைவுகூற வேண்டும்.”

“பட்டினி என்பது இங்கே ஒரு போர் ஆயுதமாகப் பயன்படுத்தப்படுகிறது, உக்ரேனில் இது நடந்தபோது நாங்கள் கண்டித்தோம், தற்போது காஸாவிலும் நடக்கிறது. மீண்டும் அதேபோன்று கண்டிக்கிறோம்,” என்றார்.

### பஞ்சத்தின் பிடியில் காஸா

காஸாவில் குறைந்தபட்சம் 576,000 மக்கள், அதாவது மக்கள்தொகையில் கால் பகுதியினர் பஞ்சத்தின் கோரப்பிடிக்கு மிக அருகில் இருப்பதாக ஐ.நா எச்சரித்ததின் விளைவாகவே பொரெல் இவ்வாறு கருத்து தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு வாரங்களில் அங்குள்ள மருத்துவமனைகளில் ஊட்டச்சத்து மற்றும் நீர்ச்சத்துக் குறைபாடு காரணமாக குறைந்தது 27 பேர் இறந்துள்ளனர். அவர்களில் பலர் குழந்தைகள் என்று காஸாவில் ஹமாஸ் நிர்வகிக்கும் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தற்போது “ஓபன் ஆர்ம்ஸ்” எனும் ஸ்பானிய கப்பல் உதவிகள் வழங்க வந்து கொண்டிருக்கிறது. இது செவ்வாய்கிழமை காலை 9 மணிக்கு முன்னதாக 200 டன் உணவுப் பொருட்களுடன் லார்னகாவில் இருந்து புறப்பட்டது.

நிவாரணங்களை ஏற்றி வரும் இந்தக் கப்பல் கடலில் பயணிக்கும்போது, உலக மத்திய சமையலறையில் (**World Central Kitchen**) பணிபுரியும் பாலத்தீனியர்கள் காஸாவின் கடற்கரையில் யாரும் அறிந்திடாத ஒரு பகுதியில் அணைக்கரையை



அமைப்பார்கள், அது நிவாரணப் பொருட்களை தரையிறக்கப் பயன்படுத்தப்படும்.

ஜெனரல் ஃபிராங்க் எஸ் பெஸ்ஸன் எனும் அமெரிக்க ராணுவக் கப்பலும் மத்திய கிழக்கு நோக்கிப் பயணிக்கிறது. அது தற்காலிக கப்பல் கட்டுவதற்கான உபகரணங்களை ஏற்றிக் கொண்டு வருவதாகவும், தங்கள் திட்டத்திற்கும் அந்தக் கப்பலுக்கும் தொடர்பில்லை என்றும் உலக மத்திய சமையலறை நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது.

நிவாரணம் வழங்க கடல் வழித்தடத்தைப் பயன்படுத்துவதை இஸ்ரேல் வரவேற்றுள்ளது. ஹமாஸுக்கு எதிராக அதன் படைகள் தொடர்ந்து போரிடும் அதேநேரம் காஸாவிற்கு நிவாரணம் வழங்கவும் உதவுவோம் என்று இஸ்ரேல் அறிவித்துள்ளது.

### ‘இராணுவ நடவடிக்கை தொடரும்’ - இஸ்ரேல்

“எகிப்தின் எல்லைக்கு அருகில் அமைந்துள்ள காஸாவின் தெற்கு நகரமான ரஃபாவிற்குள் இஸ்ரேல் தனது ராணுவ நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்லும்” என்று நெதன்யாகு செவ்வாயன்று உறுதிபடத் தெரிவித்தார்.

செவ்வாய்க்கிழமை வாஷிங்டனில் நடந்த இஸ்ரேல் சார்பு, அமெரிக்க இஸ்ரேல் பொது விவகாரக் குழு அமைப்பின் மாநாட்டில் வீடியோ வாயிலாக நிகழ்த்திய உரையில், “பொதுமக்கள் போர் அபாயப் பகுதிகளில் இருந்து வெளியேறும் அதேவேளையில் நாங்கள் ரஃபாவில் எங்கள் பணியை முடிப்போம்,” என்று கூறினார்.

இதற்கிடையில், டெல் அவிவ் நகருக்குத் தெற்கே அமைந்துள்ள நாட்டின் மூன்று முக்கிய சரக்கு துறைமுகங்களில் ஒன்றான அஷ்டோத் துறைமுகத்தை, காஸாவிற்கு கடல்வழி நிவாரண விநியோகங்களுக்கு திறக்குமாறு பிரிட்டனின் வெளியுறவுச் செயலாளர் கேமரூன் இஸ்ரேலை வலியுறுத்தியுள்ளார்.



அக்டோபர் 7ஆம் தேதி ஹமாஸ் ஆயுதக்குழு தெற்கு இஸ்ரேலை தாக்கி, சுமார் 1,200 பேரைக் கொன்று 253 பணயக் கைதிகளைக் கைப்பற்றியபோது காஸாவில் போர் தொடங்கியது.

காஸாவில் 31,180க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர் என்று ஹமாஸ் நடத்தும் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. அமெரிக்கா, கத்தார் மற்றும் எகிப்திய மத்தியஸ்தர்களை உள்ளடக்கிய பேச்சுவார்த்தை பல வாரங் களாக நடந்தும், போர்நிறுத்தம் அல்லது பணயக் கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தத்தை ஏற்படுத்தும் முயற்சி தோல்வியடைந்துள்ளது.

# அமெரிக்க அதிபர் தேர்தல்:

# மீண்டும் பைடன் VS டிரம்ப் பெரும்பான்மை பெற்றது எப்படி?

அமெரிக்க அதிபர் ஜோ பைடன் மற்றும் முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப் இருவரும் நவம்பரில் நடைபெறவுள்ள தேர்தலுக்கான தமது கட்சிகளின் சார்பில் வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கான பிரதிநிதித்துவ பெரும்பான்மைக்கு தேவையான ஆதரவைப் பெற்றுள்ளனர்.

நான்கு மாகாணங்கள், ஒரு அமெரிக்க பிரதேசம் மற்றும் வெளிநாட்டில் வசிக்கும் ஜனநாயகக் கட்சியினர் செவ்வாயன்று தங்கள் முதன்மைத் தேர்வுகளை நடத்தினர்.

இதன் விளைவாக, அமெரிக்க வாக்காளர்கள் எட்டு மாதங்களில் அதிபர் தேர்தலை எதிர்கொள்வார்கள். இந்தக் கோடையில் நடைபெறும் கட்சி மாநாடுகளில் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படுவார்கள்.

கடந்த செவ்வாயன்று 81 வயதான அதிபர் ஜோ




களிடம் இருந்தும் சவால்களை எதிரக்கொள்ள வேண்டியிருப்பதாகவும் அவர் கூறினார்.

“அமெரிக்க மக்கள் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு எங்களைத் தேர்ந்தெடுப்பார்கள் என்று நான் நம்புகிறேன்,” என பைடன் தனது பிரசாரத்திற்கான தேர்தல் அறிக்கையில் கூறினார்.

பைடன் தற்போது அதிபர் பதவியில் இருப்பதால், இது அவருக்கு இயல்பாகவே பலத்தைத் தருகிறது. அவர், ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராகத் தேர்வாவதற்கு அவர் கடுமையான சவால்களை எதர்கொள்ளவில்லை.

அவர் வயது மூப்பின் காரணமாக, அதிபர் பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதில் சிக்கல் இருப்பதாக வாக்காளர்களிடம் இருந்து கருத்துகள் வந்தபோதிலும், அவர் சார்ந்திருந்த கட்சி அவருக்கு பக்கபலமாக இருந்தது.

இதற்கிடையில், 77 வயதான டிரம்ப், குடியரசுக் கட்சியின் வாக்காளர் தளத்தில் மிகவும் பிரபலமாக இருக்கிறார். இது அவரை நன்கு நிதியளிக்கப்பட்ட போட்டியாளர்களைவிட அதிக ஆதரவு பெற்று வேட்பாளர் தேர்வில் வெற்றி பெறுவதற்கு உந்தியது.

டிரம்ப், குற்றங்களுக்கு எதிராகப் போராடவும், உள்நாட்டு எரிசக்தி உற்பத்தியை அதிகரிக்கவும், வெளிநாட்டு இறக்குமதிக்கு வரி விதிக்கவும், உக்ரேனில் போரை முடிவுக்குக் கொண்டு வரவும், உலக விவகாரங்களில் அமெரிக்காவை முதன்மைப்படுத்தும் அணுகுமுறையை மீண்டும் தொடங்கவும் சபதம் செய்துள்ளார்.

செவ்வாய்க்கிழமை இரவு முடிவுகள் அதிர்ச்சியை ஏற்படுத்தவில்லை. ஏனெனில் இருவரும் இதுவரை கட்சியில் நடந்த வேட்பாளர் தேர்வுக்கான போட்டியில் ஆதிக்கம் செலுத்தி வந்தனர்.

நவம்பரில் அதிபர் பைடனுக்கும், முன்னாள் அதிபர் டிரம்புக்கும் இடையில் மீண்டும் அதிபர் தேர்தலில் போட்டி ஏற்படுவதற்கான வாய்ப்பு இருப்பதால், அமெரிக்கர்கள் அதிருப்தி அடையும் வகையில் சில சமிக்ஞைகள் இருந்தபோதிலும், அவர்கள் மீண்டும் போட்டியிடுவது தீர்மானிக்கப்பட்டதாகவே தோன்றியது.

ஜனநாயகக் கட்சியினரும் குடியரசுக் கட்சியினரும் தங்கள் முதன்மை வேட்பாளர் தேர்வு செய்வதற்கான விதிகளில் சிறு வித்தியாசங்கள் இருந்தாலும், செயல்முறை அடிப்படையில் இண்டும் ஒன்றுதான்.

ஒவ்வொரு மாகாணத்திற்கும் கட்சி பிரதிநிதிகளுக்கு ஒரு குறிப்பிட்ட பங்கு ஒதுக்கப்படுகிறது, அவை வெற்றிபெறும் வேட்பாளருக்கு ஒட்டுமொத்தமாகவோ அல்லது விகிதாசாரமாகவோ முடிவுகளின் அடிப்படையில் வழங்கப்படும்.

குடியரசுக் கட்சி வேட்பாளர் தனது அதிபர் தேர்தலுக்கான வேட்பாளர் தேர்தலில் வெற்றி பெற முதன்மை சீசனில் குறைந்தபட்சம் கட்சியின் 1,215 பிரதிநிதிகளின் ஆதரவைப் பெற வேண்டும். அதேநேரம் ஒரு ஜனநாயகக் கட்சி 1,968 பிரதிநிதிகளின் ஆதரவைப் பெற வேண்டும்.

செவ்வாயன்று, குடியரசுக் கட்சியினர் மிசிசிப்பி,




ஜார்ஜியா மற்றும் வாஷிங்டன் மாகாணத்தில் முதன்மைக் கூட்டங்களையும், ஹவாயில் ஒரு காக்கஸையும் நடத்தினர்.

ஜனநாயகக் கட்சியினர், இதற்கிடையில், ஜார்ஜியா, வாஷிங்டன் மற்றும் மிசிசிப்பி மாகாணங்களிலும், வடக்கு மரியானா தீவுகளிலும், வெளிநாடுகளில் வாழும் ஜனநாயகக் கட்சியினருக்காகவும் முதன்மைப் போட்டிகளை நடத்தினர்.

பைடன் மற்றும் டிரம்பின் முக்கிய போட்டியாளர்கள் செவ்வாய்கிழமை முதன்மை போட்டிகளுக்கு முன்பே வெளியேறிவிட்டனர், எனவே முடிவுகள் அனைத்தும் உறுதியாக இருந்தன.


டிரம்பின் கடைசி போட்டியாளரான முன்னாள் ஐநா தூதர் நிக்கி ஹேலி, சூப்பர் செவ்வாய் அன்று டிரம்பிடம் 14 மாகாணங்களை இழந்த பின்னர் இந்த மாதத் தொடக்கத்தில் போட்டியில் இருந்து வெளியேறினார்.

இன்னும் பல மாகாணங்கள் தங்கள் முதன்மைப் போட்டிகளை நடத்தவில்லை என்றாலும், டிரம்ப் மற்றும் பைடனுக்கு தேவைப்படும் பிரதிநிதிகளின் ஆதரவுக்கு மேல் உள்ளது. இதனால், 2024 பொதுத் தேர்தலுக்கான ஏற்பாடும் இப்போது திறம்பட நடந்து வருகிறது.

அமெரிக்க அதிபர் தேர்தல் நவம்பர் 5, 2024 அன்று நடைபெறவுள்ளது.

**நிக்கி ஹேலி விலகல்**

முன்னதாக, அதிபர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் தேர்வுக்கான போட்டியில் இருந்து விலக நிக்கி ஹேலி முடிவு செய்திருந்தார். குடியரசுக் கட்சி





வேட்பாளருக்கான போட்டியில் அவர் முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்பிற்கு சவால் விடுத்தார், ஆனால் அவரால் அதில் வெல்ல முடியவில்லை.


ஹேலி விலகியது 2024ஆம் ஆண்டின் அமெரிக்கத் தேர்தலின் துவக்கமாகக் கருதப்படுகிறது. நான்கு ஆண்டுகள் முன்பு நடந்தது போலவே, முன்னாள் அதிபர் டிரம்புக்கும், இந்நாள் அதிபர் ஜோ பைடனுக்கும் இடையே போட்டி நிகழவிருக்கிறது.

**நிக்கி ஹேலியின் ஆதரவாளர்கள் டிரம்பை ஆதரிப்பார்களா?**

நிக்கி ஹேலி திரட்டியிருந்த டிரம்ப் எதிர்ப்பாளர்களின் கூட்டணியால் டிரம்பின் வெற்றியைத் தடுக்க முடியவில்லை. ‘சூப்பர் செவ்வாய்’ என்றழைக்கப்படும் கடந்த செவ்வாய்க்கிழமையன்று நடந்த முதல்கட்ட வாக்குப் பதிவுகளில் டிரம்ப் வென்றதையடுத்து அவர் குடியரசுக் கட்சியின் வேட்பாளராவது ஏறத்தாழ உறுதியாகிவிட்டது.

நிக்கி ஹேலியை ஆதரித்தவர்களை மூன்று வகையில் பிரிக்கலாம்: டிரம்ப் எதிர்ப்பாளர்கள், சார்பற்றவர்கள், குடியரசுக் கட்சி விசுவாசிகள்.

இதில் முதல் பிரிவினர், டிரம்பை எதிர்ப்பதற்காக மட்டுமே நிக்கி ஹேலியை ஆதரித்ததாகக் கூறுகின்றனர். இதுபோன்ற வாக்காளர்கள், தங்கள் பக்கம் திரும்புவர் என்று ஜனநாயகக் கட்சியினர் எதிர்பார்க்கின்றனர்.



சில மாகாணங்களில் நடந்த முதல்கட்டத் தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகளில், ஹேலியின் ஆதரவாளர்களில் 21 வீதம் பேர்தான், அவரது விலகலுக்குப் பின் குடியரசுக் கட்சி வேட்பாளருக்கு வாக்களிக்கப் போவதாகத் தெரிவித்துள்ளனர்.

ஆனால் டிரம்ப் ஆதரவாளர்கள் இந்த வாக்காளர்களைத் தங்கள் பக்கம் இழுப்பதற்குப் பெரிதாக ஆர்வம் காட்டவில்லை. அவர்கள் நிக்கி ஹேலியின் மீது அந்தரங்கத் தாக்குதல்களை மட்டுமே செய்து வருகின்றனர்.

நிக்கி ஹேலி போட்டியிலிருந்து விலகியதும்கூட டிரம்ப் முதலில் அவரைத் தாக்கித்தான் பேசினார். அதன் பின்னரே ஹேலியின் ஆதரவாளர்களைத் தன்னை ஆதரிக்குமாறு அவர் அழைப்பு விடுத்தார்.

**டிரம்பிற்கு எதிராக இருக்கும் சவால்கள் என்ன?**

ஆனால் ஒரு கருத்துக்கணிப்பின்படி, 19 வீத அமெரிக்க வாக்காளர்கள் டிரம்ப், பைடன் ஆகிய இருவரையும் வெறுக்கின்றனர். இதனால், இவர்கள் வாக்களிக்காமலே இருக்கக்கூடும் என்று சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

அமெரிக்கப் பொருளாதாரத்தில் நிகழும் மாற்றங்கள், உக்ரேன், காஸா ஆகிய இடங்களில் நிகழும் சம்பவங்கள், அல்லது டிரம்ப், பைடன் ஆகியோர் சங்கடப்படும் வகையில் செய்யும் குளறுபடிகள் ஆகியவை எப்பக்கமும் சார்பற்ற வாக்காளர்களின் முடிவை மாற்றக்கூடும் என்று அவர்கள் கருதுகின்றனர்.

மேலும், டிரம்பின் மீது இருக்கும் வழக்குகளும் அவருக்குப் பின்னடைவாக அமையக்கூடும். அவருக்கு எதிராக இருக்கும் நான்கு குற்ற வழக்குகளில் ஏதேனும் ஒன்றில்கூட அவருக்கு எதிரான குற்றம் நிரூபிக்கப்பட்டால், அவர் வாக்குகளை இழப்பார், என்றும் அரசியல் நிபுணர்கள் கருதுகின்றனர்.

**பைடன் - டிரம்ப் இடையே முற்றும் வார்த்தைப் போர்**

இந்நிலையில் டிரம்ப், ஜோ பைடனை தொலைக்காட்சியில் நேருக்கு நேர் விவாதிக்க அழைப்பு விடுத்திருக்கிறார். ‘எப்போது வேண்டுமானாலும், எங்கு வேண்டுமானாலும், எந்த இடத்தில் வேண்டுமானாலும்’ பைடனோடு விவாதிக்கத் தயார் என்று டிரம்ப் கூறியிருக்கிறார். அமெரிக்காவின் நலனுக்காக அவர் இந்த விவாதத்திற்கு பைடனை அழைப்பதாகக் கூறியுள்ளார்.

அத்தோடு, 81 வயதான பைடன், மிகவும் வயதானவர் என்றும், மறதியால் அவதிப்படுபவர் என்றும், அதனால் அவரால் தன்னோடு விவாதிக்க முடியாது என்றும் டிரம்ப் கூறி வருகிறார்.

பதிலுக்கு, 77 வயதான டிரம்ப் முதுமையால் மனச்சிதைவு அடைந்துவிட்டதாக பைடன் கூறியுள்ளார். பைடனின் தேர்தல் பிரசாரக் குழு, டிரம்ப் விளம்பரத்திற்காகவே இதையெல்லாம் செய்து வருவதாகக் கூறியிருக்கிறது.